விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 279 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 07 ஞாயிற்றுக்கிழமை (24.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## திலீபன் நினைவேந்தலுக்கு தடை விதிக்க முடியாது

### முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம்

(முல்லைத்தீவு)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்குமாறு மாங்குளம் மற்றும் மல்லாவி பொலிஸார் விடுத்த கோரிக்கையை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு பொத்துவில் முதல் யாழ்ப்பாணம் வரையில் ▷19

## புங்குடுதீவில் நேற்று திலீபனுக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி பவனி புங்குடுதீவில் நேற்று ▷19

## தியாக தீபத்துக்கு மன்னாரில் அஞ்சலி



▷19

# தமிழர் தாயகம் எங்கும்

# உணர்வுபூர்வமாக திலீபனுக்கு அஞ்சலி

- பல இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள்.
- உணர்வுபூர்வமாக பொதுமக்கள் பலர் பங்கேற்பு.
- பாதுகாப்பு கெடுபிடிகளும் தாராளம்.

தியாக தீபம் திலீபன் இந்திய அமைதிப் படையினரிடம் 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து அறப் போராட்டத்தின் வழியில் நீரும் அருந்தா உண்ணாவிரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத சமயத்திலும், உறுதியுடன் அந்த உண்ணாவிரதத்தில் 1987ஆம் ஆண்டு செப் ▷19



கோப்புப்படம்

## முல்லையில் இளைஞனின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கோரங்கண்டல் மங்கை நகர் பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த உத்தமன் (வயது-28) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பூட்டப்பட்ட வீடு ▷19

## இலங்கையின் சமாதானத்தில் அமெரிக்கா தொடர்ந்து நம்பிக்கை

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்



(கொழும்பு)

இலங்கையின் சமாதானம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந்து நம்பிக்கை கொண்டுள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு மகரகம இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்ற நிகழ்வில் ▷19

## சாதாரண தரப் பரீட்சை 1½ மாதம் தாமதமாகும்

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை குறைந்தது ஒன்றரை மாதமளவில் தாமதமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பிடிபன பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரி ▷19

### மன்னாரில் 3 கோடி பெறுமதியான

## 2 இலட்சத்து 70 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்பு



▷19

## மக்களின் சுதந்திரத்தை ஒழிக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

"அரசாங்கம் எல்லா சந்தர்ப்பத்திலும் மக்களின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றது. அதன் புதிய போக்கே சமூக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளை கட்டுப்படுத்துவது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ▷19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அந்தியேட்டிக் கிரியைகள் : 25.09.2023 திங்கட்கிழமை**

கடந்த 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

## சின்னராசா செல்வராசா (ராஜன்)

அவர்களின் சிவபேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 25.09.2023 திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரின் வீட்டில் இடம்பெற்று அஸ்தி ஊறணி புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும் அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் அதே தினம் மு.ப.11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில் 08.06.1967 விண்ணில் 27.08.2023

(17218)

**இங்ஙனம் : குடும்பத்தினர்**

# வேலையாட்கள் தேவை

- சிற்றுண்டி தயாரிப்பவர் ஆண்/ பெண்
- உணவு பரிமாறுபவர் ஆண்/ பெண்
- சமையல் உதவியாளர் ஆண்/பெண்
- யூஸ் தயாரிப்பவர் ஆண்/பெண்

(17199)

**076 166 1986**
**070 664 7466**

# யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Beautician*
மணப்பெண் அலங்காரம்.பலவிதமான சேலை அணியும் வகுப்புகள்.
சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன.
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

(C-7313)

## இரத்ததான முகாம்

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையமும், கொக்குவில் மனோன் மணி சனசமூக நிலையமும் இணைந்து முன்னெடுக்கும் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று காலை 08.30 மணி முதல் பிற்பகல் 02 மணி வரை கொக்குவில் மனோன் மணி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## சூடு ஒருவர் பலி

காலியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலி - டிக்ஷன் வீதியில் குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உந்துருளியில் பயணித்த இருவரே இவ்வாறு துப்பாக்கி சூட்டை நடத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வர்த்தகர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 259/= | (max2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 432/= | (max 2Kg) |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 299/= | |
| 1 Kg கோதுமை மா | - 180/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 197/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg தீட்டல் | - 192/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1040/= | ~~(1080/=)~~ |
| 400 g அன்லீன் பால்மா | - 1250/= | ~~(1350/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 70g Baby Soap | - 108/= | ~~(145/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

1040/=




~~1080/-~~

(17217)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

**பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.**

**Happy Supermarket 0777 8080 30**

# காணவில்லை

வெள்ளை நிற LABRADOR RETRIEVER இன நாய் நேற்று முன்தினம் (22.09.2023) இரவு 9 மணியளவில் 609, நாவலர் றோட், நல்லூரில் உள்ள வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டது. **இதனை பற்றிய தகவல் வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

**078 495 7847**
**021 222 9376**
**074 229 2107**

(17214)

# Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

**(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)**

(C-7314)

**021 222 1265,076 250 0098**


# சொர்க்கம் திருமண சேவை

- கனடாவில் வசிக்கும் 38 வயது விவாகரத்து பெற்ற மணப் பெண்ணுக்கு தகுந்த மணமகனை கனடாவில் எதிர்பார்க்கின்றோம்.
- கனடாவில் வசிக்கும் 39 வயது விவாகரத்து பெற்ற மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை கனடாவில் எதிர்பார்க்கின்றோம்.
- 1989 இல் பிறந்த பூராடம் நட்சத்திரம் சூரியன் செவ்வாய் மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகனை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

(17203)

**001 416 666 1855 (கனடா)**
**077 887 6969**
**077 200 0230 (யாழ்ப்பாணம்)**

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 - 08 - 1949

உதிர்வு 05 - 10 - 2022

## அமரர் சரவணமுத்து நவராசசிங்கம்

**(நவராசா, நவரை)**

தங்க மகனே,
கர்ச்சித்து கர்வத்துடன்
வாழ்ந்த சிங்க மகனே,
உணர்வால் உந்தியே
உறவுகளை அணைத்து
உதவிடு நேச மகனே,
உபசாரம் பண்ணியே
உள்ளம் களித்திடு
உத்தம புத்திரனே
உன் நினைவுகளோடு
நித்தமும் கலந்திருப்போம்.

புதுவீதி, கரவெட்டி தெற்கு
கரவெட்டி.

(17206)

தகவல்
குடும்பத்தினர்

# ஆதன உரிமையாளரால் குறித்த ஆதனத்தின் உரிமைப் பிரகடனம்

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுப்பகுதி, அல்லைப்பிட்டி கோவில்பற்று அல்லைப்பிட்டி இறை, வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் அல்லைப்பிட்டி பிரதேச சபையின் எல்லைக்குள் J/10 அல்லைப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் அமைந்த 'பிரப்பந்தாழ்வு' நில அளவையாளர் அளவின் படி நிலப்பரப்பு 28 குழி 0.69 பனைகளும் வடலிகளும்

**எல்லை கிழக்கு** - ஏரம்பர் தருமலிங்கத்தின் உரிமையாளர்களின் ஆதனம்.

**எல்லை வடக்கு** - அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி

**எல்லை மேற்கு** - றோமன் கத்தோலிக்க பிஷப்பின் ஆதனம்

**எல்லை தெற்கு** - தெரு

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆதனமானது தவவிநாயகம் சூரியகுமார் 2ம் வட்டாரம் அல்லைப்பிட்டி என்பவருக்கு சொந்தமானது.இவ் ஆதனமானது முப்பத்து எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட ஆவண உரிமையும், ஆட்சி உரிமையும் எமக்கு உரியன.

இவ் ஆதனத்தை, போலியான ஆவணங்களை தயாரித்து சட்ட விரோத நபர்கள் சட்ட விரோதமாக அறுதி விற்பனை செய்ய முற்படுகின்றார்கள்.

எனவே இவ் ஆதனத்தை வேறு யாராவது வாங்கும் பட்சத்தில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு அவர்களே பொறுப்பாவார்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

**தவவிநாயகம் சூரியகுமாரின்**
**அற்றோனிக் தத்துவகாரர்**
**நாகராசா அம்பிகைபாகன்**

(17212)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தைக் கையிலெடுத்து இனி ஆட்சியைப் பிடிக்க முடியாது

## ரணில் திட்டவட்டம்

(நியூயோர்க்)

**இலங்கையில் இனிமேல் எவரும் இனவாதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு ஆட்சியைத் தக்க வைக்கவோ அல்லது ஆட்சியைப் பிடிக்கவோ முடியாது. ஏனெனில் மக்கள் அனைவரும் விழிப் படைந்து விட்டார்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்ற நியூ யோர்க் சென்ற ஜனாதிபதி, அங்கு சர்வதேச ஊடகம் ஒன்றிடம் இலங்கையின் சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் "இலங்கை மக்கள், ஜனநாயக அரசியலில் மாற்றத்தை விரும்பினார்கள். அந்த மாற்றம் இறுதியில் ஏற்பட்டது. ஜனாதிபதிப் பதவியையும் நான் ஏற்க வேண்டி வந்தது.

நாட்டின் பெரும் அரசியல், பொருளாதார சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றேன். சவால்களை முறியடித்து - தடைகளைத் தாண்டி நாட்டை முன்னோக்கி நகர்த்துகின்றேன்.

இதற்கு நாட்டு மக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புக்களும் ஆதரவுகளும் கிடைக்கின்றன.

பல வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் சர்வதேச நிறுவனாங்களும் இலங்கை மீண்டெழ உதவிகளை வழங்கின. இப்போதும் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

எனது பதவிக் காலத்தில் தேசிய பிரச்சினைகளுக்கு இயன்றளவு படிப்படியாகத் தீர்வுகளைக் கண்டு வருகின்றேன்.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் இன ரீதியிலான பிரச்சினைகளைத் தூண்டிவிட சிலர் முனைகின்றனர். மீண்டுமொரு இன வன்முறை ஏற்பட ஒருபோதும் இடமளியேன்" என தெரிவித்துள்ளார். (நி)

# தப்பிக்க தனுஷ்கோடி சென்றவர் கைது

(மன்னார்)

இலங்கையில் இருந்து தனுஷ்கோடி கடல் பகுதிக்கு சட்டவிரோதமாக சென்ற இளைஞரை பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை தனுஷ்கோடி அருகே உள்ள மணல் திட்டில் இலங்கை அகதி ஒருவர் வந்திறங்கி இருப்பதாக மீனவர்கள் மூலம் கடலோர பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதை தொடர்ந்து கடலோர பொலிஸார் மீனவர்கள் உதவியுடன் மீன்பிடி படகு ஒன்றில் நடுக்கடல் மணல்திட்டில் தவித்துக் கொண்டிருந்த இலங்கை மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த கிஷோகரன் என்பவரை மீட்டனர்.

தொடர்ந்து மண்டபம் மறுவாழ்வு முகாமில் வைத்து கிஷோகரனிடம் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் அவர் இலங்கையில் பண மோசடி வழக்கில் சம்பந்தப்பட்டு சிறை சென்றவர் என்றும் வழக்கு விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக தமிழகம் வந்துள்ளதாகவும் மீண்டும் இலங்கை செல்ல முயற்சிகள் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால் பாஸ்போர்ட் தடை சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை தனுஷ்கோடி பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். (நி)

# மசகு எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரிப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருகிறது.

இதன்படி, டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90.03 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

எனினும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை சிறிய அளவான வீழ்ச்சியை பதிவு செய்து 93.27 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலையும் அதிகரிப்பை பதிவு செய்து 2.63 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி)


# மரண அறிவித்தல்

## அமரர். ஏகாம்பரநாதன் சங்கர் (நயினாதீவு-சுவிற்சலாந்து)



**தாயின் மடியில் 16.05.1971 நோயின் பிடியில் 15.09.2023**

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிற்சலாந்து (Basel) நகரை வதிவிடமாகவும் கொண்டிருந்த ஏகாம்பரநாதன் சங்கர் அவர்கள் 15.09.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார். இவர் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளை, குலசேகரம் செல்லம்மா ஆகியோரின் அருமைப் பேரனும், ஏகாம்பரநாதன் செல்வமலர் தம்பதிகளின் மூத்த மகனாரும், காலஞ்சென்றவர்களான நடராஜன் கிருஷ்ணவேணி தம்பதிகளின் அன்பு மருமகனும், அருள்விழியின் ஆருயிர்க் கணவரும், சௌமியா, சாஜிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுதமதி, யோகர் (U.k), சேகர் (Canada), சுதாகர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசோ, லோகினி மற்றும் மலர்விழி, கயல்விழி, நீலவண்ணன், காலஞ்சென்ற மணிவண்ணன், கமலவண்ணன், மணிவிழி, கலைவண்ணன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஞானமலர் இரத்தினசிங்கம், வசந்தமலர், விஜயகுமார் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், பிரபா, ஆர்த்தனா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், தர்மலிங்கம், சுதாகரன், மயூரன் ஆகியோரின் சகலனும், நாகராஜேஸ்வரி, ஜெசிதா, கேமலதா, தனலட்சுமி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.09.2023 திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு (இலங்கை நேரம்) சுவிற்சலாந்தில் நடைபெறும் வேளை துயர் பகிர்வும், மலரஞ்சலி நிகழ்வும் இல.21/21, இரண்டாம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கிலுள்ள பெற்றோரின் இல்லத்தில் இடம்பெறும்.

இவ்அறிவித்தலை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

இல.21/21, 2 ஆம் ஒழுங்கை,
கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு.

தொலைபேசி இல
021 222 1080
0041617219823


தகவல்
குடும்பத்தினர்.

(17204)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தியாக தீபம் திலீபனின் நினைவு நாளினை முன்னிட்டு மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி





தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு சிறப்பு நிகழ்வாக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று நிரோஜன் விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - சுதந்திரபுரம், நிரோஜன் விளையாட்டு மைதானத்தில் குறித்த மென்பந்து கிரிக்கெட் போட்டியானது தாயக செயலணியால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

குறித்த போட்டியில் முதலில் இளந்தளிர் மற்றும் நிரோஜன் விளையாட்டு கழகங்கள் முதல் போட்டியை எதிர்கொண்டுள்ளது.

தொடர்ச்சியாக மூன்று நாட்கள் இடம்பெற்று 25 ஆம் திகதி இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது.

வெற்றி பெறும் அணிக்கு திலீபனின் நினைவை சுமந்த வெற்றிக் கிண்ணமும் சிறந்த வீரருக்கான விருதும் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியானது அணிக்கு பதினொருவர் கொண்ட ஐந்து பந்து பரிமாற்றங்களை கொண்டதாகும். இதில் 14 அணிகள் பங்குபற்றவுள்ளது.

இன்று 24ஆம் திகதி ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டமும் நாளை துவிச்சக்கர வண்டி ஓட்டமும் இடம்பெறவுள்ளன. அதனை தொடர்ந்து நாளை மறுதினம் குறித்த மைதானத்தில் அடையாள உண்ணாவிரதமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-299)

# ஜொனியன்ஸ் அணி வெற்றி




சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களிற்கான இருபது-20 துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது.

11 கழகங்கள் பங்குபற்றிய குறித்த போட்டியில் அண் மையில் யாழ்.மத்திய கல் லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப்போட்டியில் ஜொலிஸ்டார் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதின.

நாணய சுழற்சியினை வென்று முதலில் களத் தடுப்பினை தீர்மானித்தது ஜொலிஸ்டார். இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி ஆறு இலக்குகளை இழந்து இறுதியில் 200 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஆல் அணி சார்பாக ரட்ணம் 72, கௌரிபாகன் 57 ஓட்டங்களை பெற்றனர். ஜொலிஸ்டார் அணி சார்பாக மணி வண்ணன் 2 இலக்குகளையும் நிசாந்தன் 2 இலக்குகளையும் முரளிதரன் ஒரு இலக் கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்டார் அணி சகல இலக்குகளையும் இழந்து 81 ஓட்டங்களை பெற்றது.

இதையடுத்து ஜொனிய ன்ஸ் அணி 119 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அல் அணி சார்பாக சிவராஜ் 28, ஜெயந்திரன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். ஜொனியன்ஸ் அணி சார்பில் ஜே.ஜி.பிரதீபன் 3, நாஜாறாம் 1 மற்றும் கௌரிபாகன் 2 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளனர்.

இப்போட்டியில் ஆட்ட நாயகன் விருது ஜொனியன் கழக வீரர் கௌரிபாகன், அல் அணி வீரர்களான ரட்ணம் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் ஜி.பிரதீபன் சிறந்த பந்து வீச்சாளருமாகவும் தொடரின் ஆட்ட நாயகனாக குறித்த கழக அணி வீரன் குமணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (5-6)


## மரண அறிவித்தல்

பிறப்பு 22 – 05 – 1948



இறப்பு 22 – 09 – 2023

### திரு.கிருஷ்ணபிள்ளை ஜெயராஜா

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை ஜெயராஜா அவர்கள் 22.09.2023 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்வர்களான வி.ஈஸ்வரிதேவி, கி.அருள்வேல்நாதன் மற்றும் குணகுமாரியின் அன்பு சகோதரரும் காலஞ்சென்றவரான விஸ்வலிங்கம் மற்றும் விஜயரட்ணத்தின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கோபிதாஸ், ரிஷிகுமார் மற்றும் நளினகுமார், வளவனின் அன்பு மாமனாரும் செந்தில்ராணி, லக்குணா, கௌரி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் எலக்ஷா, பதுஷா, டனுக்ஷா, யதுர்ஷா, டினஸ், மவுசிகன், கௌவுசிகன், லக்சிகன் ஆகியோரின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.09.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 044 4357
077 288 1771

தகவல் :
குடும்பத்தினர்

(C-7315)



## கொழும்பு விலையில்...



யாழ்ப்பாணத்தில் கோழிகள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- 33 வருட கால வியாபாரப் பண்ணை
- கடை வியாபாரிகளுக்கு விசேட கழிவு
- புறோயிலர், பேரன்ஸ், கல்பேட்ஸ், ஊர்க்கோழி, சேவல், விறாத்து குஞ்சுகள் இவை அனைத்தும் விசேட விலை கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:

நியூ சிற்றி பாம்
நியூ சிற்றி கோழிக்கடை
இல.8, சின்னக்கடை
மார்க்கெட் குருநகர், யாழ்ப்பாணம்.

(17219)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோழி இறைச்சி விலை 850 ரூபா வரை குறையும்

## வர்த்தக அமைச்சு தகவல்

(கொழும்பு)

இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை உள்ளூர் சந்தையில் 850 ரூபா முதல் 900 ரூபாவரை கொள்வனவு செய்ய வாய்ப்பு ஏற்படுமென்று வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கோழி இறைச்சி விலையை 850 ரூபாவுக்கு குறைக்க வேண்டுமென்று கோழிப் பண்ணை உற்பத்தியாளர்களிடம் அமைச்சர் கேட்டுக் கொண்டதுடன், இவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமெனவும் அவர் தெரிவித்தார். (நி)

# ரஷ்யாவிற்கு எதிரான தடைகளை இலங்கை ஒருபோதும் ஆதரிக்காது

(மொஸ்கோ)

ரஷ்யாவுக்கு இலங்கை நட்பு நாடாகவே உள்ளதாக ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் ஜனித்த லியனகே தெரிவித்துள்ளார். மொஸ்கோவில் இடம்பெற்ற ரஷ்ய - இலங்கை வர்த்தக தரப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பில் வைத்து இலங்கை தூதுவர் இதனை தெரிவித்துள்ளார். இக்கட்டான காலங்களில் ரஷ்யா இலங்கைக்கு வழங்கிய உதவிகள் குறித்தும் இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார். உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பை அடுத்து ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை மேற்கத்தேய நாடுகள் அதிகரித்துள்ள நிலையில் ரஷ்யாவிற்கு எதிரான பேச்சுக்களையும் பொருளாதார தடை களையும் இலங்கை ஆதரிக்காது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)




## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)

Reg No-9583 T.P-021 2214 460

### ஆட்டோ சாரதிகளின் வேண்டுகோள்

யாழ்.மாவட்டத்தில் முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட தரிப்பிடத்தில் சேவையாற்றுகின்ற சாரதிகள் ஒன்று கூடி மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் தற்போது யாழ்ப்பாண பகுதியில் pick me கட்டண மீற்றர் பொருத்தி அனுமதியின்றி சேவையில் ஈடுபடுகின்ற முச்சக்கரவண்டிகளால் கடந்த 35 வருடங்களாக சேவையில் ஈடுபட்டு வருகின்ற சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சாரதிகள் பெரும் தொழிற் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் எமது சங்க அனுமதியுடன் பொருத்தப்பட்டுள்ள Link Lank கட்டண மீற்றர் யாழ். மாவட்டச் செயலகம், யாழ். மாநகர சபை மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட கட்டண விதிமுறைக்கமைவாகவே பாவனைக்குப்படுத்தப்படுகின்றது.

எனவே எமது சாரதிகளின் பாதிப்பினைக் கருத்திற் கொண்டு யாழ்.மாவட்டச் செயலகம், யாழ். மாநகர சபை மற்றும் பொலிஸ் திணைக்களத்தினர் இணைந்து பாதிக்கப்பட்டவர்களின் நிலையைக் கருத்திற் கொண்டு ஆவண செய்துதவுமாறு சாரதிகள் அனைவரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(சி-7312)

நிர்வாகம் 40,முனிஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

தோற்றம் 26 – 01 – 1959



மறைவு 23 – 09 – 2023

### சிவானந்தம் நாகேஸ்வரி

அல்லாரை வடக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தம் நாகேஸ்வரி அவர்கள் நேற்று 23.09.2023 சனிக்கிழமை அதிகாலை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ் சென்றவர்களான இராசையா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்ற ஐயாத்துரை மற்றும் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவானந்தம் (ஓய்வு நிலை கிராம அலுவலர்- பிரதேச செயலகம் கோப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும் தபிரா(ஆசிரியை-மு/புதுக்குடியிருப்பு R.C வித்தியாலயம்), தயூரா-(ஆசிரியை- கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயாரும் தர்சன்(இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மாமியும், நாகேந்திரன்(கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும், கலாகுமாரி(கனடா), வசந்தகுமாரி, நித்தியானந்தம், ஜெயானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.09.2023 இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

(சி-7311)

மருதடிப்பிள்ளையார் வீதி, அல்லாரை வடக்கு,கொடிகாமம். தகவல்-குடும்பத்தினர். 077 711 0160, 077 303 0240

# இராசிபலன்

24.09.2023
புரட்டாதி 07 , ஞாயிற்றுக்கிழமை
நவமி காலை 6.15 மணிவரை
தசமி பின்னிரவு 4.09 மணிவரை

பூராடம் முற்பகல் 10.39 மணிவரை
சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம்-4.32-6.02 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்-
மிருகசீரிடம்,திருவாதிரை

வளவன்




நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்,சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு ,புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்,சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள்.




உறவினர் நண்பர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




உறவினர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை,குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள்.




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.




சுப காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடப்பர்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.




சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




எதிர்பாராத காரியமொன்று நடை பெறும் வாய்ப்புண்டு, கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், போசனசுகமுண்டு, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

அளவறிந்து உண்பவன் ஆயுள் நீளும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 லட்சம் பெறுமதியான தங்க நகை திருட்டு

(கரணவாய்)

கரணவாய் தெற்கில் உள்ள வீடொன்றில் மூன்று லட்சம் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டிலே இச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றநேரம் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

2 பவுண் காப்புகளும் ஒரு தொகைப் பணமும் களவு போயுள்ளதாக வீட்டு உரிமையாளர் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (நி-60)





வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் வருடாந்த உற்சவத்தின் 10 ஆவது திருவிழாவாகிய வெண்ணைத்தாழித்திருவிழா நேற்று முன்தினம் மாலை வசந்த மண்டபப் பூசைகளுடன் ஆரம்பமாகி நடைபெற்றது. (படங்கள்:- கஜிந்தன்)

## யாழ்.வணிகர் கழகத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது.

அதில் யாழ்.வணிகர் கழகத்தின் தலைவராக இ.ஜெயசேகரன், உபதலைவர் ந.ஜெகமோகன், செயலாளர் சி.கேசவன், உபசெயலாளர் இ.ஜனக்குமார், பொருளாளராக செ.ஜன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர். (நி)



பாலூதல் நிகழ்வில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ள, யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி மாணவி செல்வி ஜ. மேரிசா, இலங்கை சதுரங்க சங்கம் நடத்திய சதுரங்கப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் பங்குபற்றி சாதனை படைத்த தீ. ஹரிகணன் ஆகிய இருவரையும் கௌரவித்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.


## சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்னக்கடையில் வசிக்கும் 63 வயதுடைய நபர், விடுதி-8 இல் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் இறந்துவிட்டார்.

இதுவரை இவரது சடலத்தை எவரும் உரிமை கோரவில்லை.

எனவே குறித்த நபரின் சடலத்தை அடையாளம் காட்டி பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)



தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அம்பாறையில் இருந்து புறப்பட்ட ஊர்தியானது நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கு வந்திருந்த போது மலர் தூவி, சுடரேற்றி மக்கள் வணக்கம் செலுத்தினார்கள். (படம்:-மகாலிங்கம்)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நேற்று சனிக்கிழமை கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

இவ் இரத்ததான நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பலர் பங்கேற்று இரத்ததானம் வழங்கினர். (படம்:-சிவசாந்தன்)

## கனடா - ஒன்ராரியோ மாகாண இராஜாங்க அமைச்சராக ஈழத்தமிழன்



(ஒட்டாவா)

கனடாவின்- ஒன்ராரியோ மாகாண போக்குவரத்துத்துறை இணை அமைச்சராக ஈழத்தமிழரான விஜய் தணிகாசலம் என்பவர் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் இதற்குமுன் ஒன்ராரியோ மாகாண சட்டசபை உறுப்பினராக இருந்தவர்.

இவரது பெற்றோர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இல.373 பிரதான வீதியில் அமைந்துள்ள 'கூட்டுறவு நகர்' திறப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.32 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (நி)

# சீருடைக்கான முழுச் செலவையும் வழங்க சீனா இணக்கம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டிற்கு தேவையான சீருடைக்கு செலவாகும் முழுத் தொகையையும் வழங்க சீனா இணங்கியுள்ளது.

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனை தெரிவித்தார்.

இந்த ஆண்டு 70 வீதமான பாடசாலை சீருடைகளை சீன அரசாங்கம் வழங்கியிருந்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது 11 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவு திட்டத்தை 22 இலட்சம் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உலக உணவுத் திட்டம் இதற்கு அனுசரணை வழங்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், தற்போது 2024 ஆம் ஆண்டுக்கு அவசியமான பாடப்புத்தகங்களில் 50 வீதமானவை அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளதாகவும் தனியார் துறையினருக்கு வழங்கப்படவுள்ள பாடப்புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கை இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் டிசெம்பர் 15 ஆம் திகதியளவில் அனைத்து பாடப் புத்தகங்களையும் அச்சிடும் பணி நிறைவடையும் எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 408
Viber 076 636 3378



# மீண்டும் ஒரு வன்முறை வேண்டாம்



> உலக வரலாற்றில் அறவழிப் போராட்டம் தோற்றுப் போனதும் அறவழியில் போரிட்ட வீரன் மரணித்துப் போனதும் ஈழத்திலேயே நடந்தேறியது.

அபிமன்யு

1983 ஜூலை 24 ஈழத்தமிழினத்தின் மீதான இன அழிப்பு தொடங்கப்பட்ட நாள். கறுப்பு ஜூலை.

இலங்கையில் ஏன் இனங்களுக்கிடையில் பிரச்சினை எழுந்தது என்ற கேள்வியை உற்று நோக்கினால் "இன வாதம்" என்ற பூதம் எழுந்து பதிலாய் நிற்கும்.

1983 ஜூலைக் கலவரம் தோற்றுவிக்கப்பட்டதன் பின்னணியும் இதுவே.

ஒரு சிறுபான்மை இனம் தனது உரிமைகள் மறுக்கப்படும் போது அதை பெற்றுக் கொள்ள எத்தனிப்பது எந்த வகையிலும் தவறானதொரு செயல் அல்ல.

தமிழினமும் தனது மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுக் கொள்ள எத்தனித்தது. அந்த எத்தனிப்பு முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டதில் முடிவுற்றது.

ஆயினும் தமிழினத்துக்கான உரிமைகள் இன்றுவரை கிடைத்ததாய் இல்லை.

1983 ஜூலை 23 ஆம் திகதி யாழ். திருநெல்வேலிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 13 இராணுவத்தினர் பலியாகிப் போனதன் பின்னணியில் எழுந்த பதற்றம் பெரும் கலவரமாக வெடித்தது.

கலவரம் என்றால் இரு தரப்புகள் மோதிக் கொள்வதாகும்.

ஆனால் பெரும்பான்மை இனவெறியரால் தமிழினம் படுகொலை செய்யப்பட்டதையும் அவர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டதையும் எந்த வகையிலும் தமிழினத்தினால் எதிர்க்க முடியவில்லை.

தமிழர் பகுதிகளை இலக்குவைத்து பெரும்பான்மை இனவெறிக் கும்பல் வெறியாட்டம் ஆடும்போது அப்போதைய ஐ.தே.க அரசு அதை தடுப்பதற்கு எந்த வகையிலும் முயற்சி எடுக்கவில்லை என்பதற்குள் இருக்கும் தமிழினத்திற்கு எதிரான அரச இயந்திரங்களின் போக்கை நாம் புரிந்து கொள்ள முடியும்.

சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான சொத்திழப்புக்களும் ஏற்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதற்கு எதிர் தாக்குதலை அப்பாவிப் பொது மக்கள் மீது பிரயோகிப்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. இந்த வன்மமே தமி ழினம் பல்லாயிரக் கணக்காக அழிவ தற்கு காரணமாக அமைந்தது.

தொடர்ந்து இலங்கை ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த இன அழிப்பு முள்ளி வாய்க்காலில் உச்சத் தைத் தொட்டு முடிக்கப் பட்டது.

அதன் பின் பயங்கரவாதம் கூண் டோடு அழிக்கப்பட் டதாய் சர்வ தேசத் திற்கு இலங்கை அரசு அறிவித்தது.

ஒரு இனத்தை அழித்து வெற்றி கண்ட நாளை வெற்றி விழாவாய் கொண்டாடி தமிழர் மனங்களைத் தொடர்ந்து காயப் படுத்தி வரும் இனவாத பெரும்பான்மை, தியாகங்களை மதித்து நடந்ததில்லை என்பதே வரலாறு.

ஆம்; 1987 ஆம் ஆண்டு இந்திய அரசிடம் ஐந்தம்சக் கோரிக்கையை முன்வைத்து நல்லூர் முன்றலில் நீர்கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்த தீயாக தீபம் திலீபன் 12 ஆவது நாள் அந்தக் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாமல் மரணித்தான்.

உலக வரலாற்றில் அறவழிப் போராட்டம் தோற்றுப்போனதும் அறவழியில் போரிட்ட வீரன் மரணித்ததும் ஈழத்தில் மட்டுமே நடந்தேறியது. அந்தளவிற்கு தமிழினத்தின் அறவழிப் போராட்டத்தை எவரும் கண்டுகொள்ளவில்லை.

கடந்த 35 வருடங்களாக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் திலீபனின் நினைவேந்தல் நாள் ஆரம்பமானதைத் தொடர்ந்து தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் வடக்கு-கிழக்கில் தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி பவனியை ஆரம்பித்தனர்.

திலீபனின் ஊர்திப் பவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை பகுதியில் வரும்போது சிங்கள இன வெறியர்களால் அடித்து நொறுக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட பலர் தாக்குதலுக்கும் உட் படுத்தப் பட்டிருந்தனர். குறித்த விடயம் நாடளாவிய ரீதியில் பெரும் கொதி நிலையை ஏற்படுத்தியிருந்தது.

அறவழியில் போரிட்டு மடிந்த ஒரு வீரனை நினைகூற அனுமதி மறுக்கும் பெரும்பான்மையினரின் சிந்தனையினை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

திலீபனின் ஊர்தி மீதான தாக்குதல் பாதுகாப்புத் தரப்பினர் முன்னிலையில் நடைபெற்றது என்பது தான் சகிக்க முடியாத விடயம்.

குறித்த தாக்குதலை மேற்கொண்ட இனவெறிக் கும்பலை இன்னும் கைது செய்யாத நிலையில் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரி நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறது பாதுகாப்பு தரப்பு.

சிறுபான்மை இனமென்றால் அடங்கி ஒடுங்கி தமது காலின் கீழ் இருக்க வேண்டும் என நினைக்கும் சில தரப்புகளின் சதிவலையில் பெரும்பான்மை சிங்கள மக்கள் வீழ்ந்து விடக் கூடாது.

ஏனென்றால் ஏலவே 1983 இல் நடந்ததைப் போன்று மீண்டும் நடைபெறும் வாய்ப்புக்களை திலீபனின் நினைவுத் தூபியின் மீதான தாக்குதல் பறைசாற்றி நிற்கிறது. மீண்டும் ஒரு இனக் கலவரம் வேண்டாம். அதை தமிழ் இனம் விரும்பவும் இல்லை.

ஒரு மனிதன் இழக்கக் கூடாதவை எவையோ அவற்றை எல்லாம் இழந்து நிற்கிறது தமிழினம். ஆயினும் தன்மானத்தை இன்றுவரை அது இழக்கவில்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை தமிழினத்துக்கு மாத்திரமல்ல அனைத்து இனத்திற்கும் உண்டு.

அவற்றைத் தடுக்க நினைத்தால் அது மீண்டும் முதலில் இருந்து தொடங்குவதாய் அமைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். 2022 ஆம் ஆண்டு நடந்த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் 3A எடுத்து யாழ்ப்பாண மாவட்டத்தில முதலாமிடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஆனந்தஜோதி வித்தியாசாகர் அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் நடந்த பாராட்டு விழாவில் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசியிருந்தார்.

ஆங்கிலத்தில் அவர் கூறிய கருத்துக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிக உன்னிப்பாகக் கவனித்ததோடு, நல்ல கருத்துக்கள் எனப் பாராட்டியுமிருந்தார்.

உயர்ந்த சபையில் மாணவன் வித்தியாசாகர் மிகத் துணிச்சலாக உரை ஆற்றியமைக்காக அந்த மாணவனை ஆலடி மாநாட்டில் பாராட்டுகின்றோம் எனக் கூறி அமர்ந்தார்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலில யாசகம் செய்கின்ற கணேசன் (பாபுஜி) என்பவர் யாசகத்தின் மூலம் தான் சிறிது சிறிதாகச் சேர்த்த பணத்தில் இரண்டு இலட்சம் ரூபாவை வண்ணை பொருமாள் கோயிலின் புனருத்தாரணப் பணிக்காக வழங்கியுள்ளார். அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம் எனக் கூற, ஆலடியில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து அந்த யாசகருக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

***சாத்திரியார்:-*** நடக்கிற கும்பாபிசேகத்தோடயாவது வண்ணார்பண்ணைப் பெருமாள் கோயில் மீள் எழுச்சி பெற வேணும்.

***கங்காணி:-*** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

***சாத்திரியார்:-*** வண்ணார்பண்ணையில பெருமாள் கோயில் என்றழைக்கப்படும் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் கோயில் எண்டால் சொல்லவோ வேணும்.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பெருமாள் கோயிலில சனக்கூட்டம் நிரம்பி வழியும். அதிலும் புரட்டாதிச் சனிக்கிழமை எண்டால் சொல்லவும் வேணுமோ.

சனிஸ்வரனுக்கு எள்ளெண்ணை எரிப்பதில அடியார்கள் முண்டியடிப்பினம். ஏகப்பட்ட பக்தர்கள் எள்ளெண்ணெய் எரிப்பினம். தொண்டர்கள் நின்று எரிந்த சுட்டிகளை அங்கிருந்து அகற்றுவினம். சனீஸ்வரனுக்குத் தொடர்ச்சியாக அர்ச்சனை நடக்கும். இதற்கும் மேலாக, பெருமாள் கோயில் வளாகம் முழுவதும் எள்ளெண்ணெய்ச் சுட்டி வியாபாரம் களை கட்டியிருக்கும்.

ஆனால் இப்ப பெருமாள் கோயிலில அடியவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைஞ்சு போச்சுது. இதனை நினைக்கும் போதுதான் கவலையாக இருக்குது.

எதுவாயினும் பெருமாள் கோயில் மீண்டும் புத்தெழுச்சி பெற வேணும். திரும்பவும் ஏகப்பட்ட அடியார்கள் வரதராஜப் பெருமாளை வணங்கி நன்மை பெற வேண்டும் எண்டு பிரார்த்திப்போம்.


இவ்வாறு சாத்திரியார் கூற, ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

***விதானையார்:-*** அது சரி, வவுனியாவில உயிரிழந்த ஒரு சிறுமியின் உடலை புதைத்த இடத்தில இருந்து ஆரோ புரட்டி எடுத்துக் கொண்டு போயிருக்கினம். அடக்கம் செய்யப்பட்ட உடலைக் கூட திருடிச் செல்கிற அளவில மிக மோசமான நிலைமை ஏற்பட்டிருக்குது.

***மூப்பர்:-*** அடக்கம் செய்யப்பட்ட சிறுமியின்ர உடலை எடுத்து என்ன செய்யிறது.

***சாத்திரியார்:-*** அதுதானே இப்ப எங்கட மக்கள் செய்வினை எண்ட மாயை வலைக்குள்ள விழுந்து நாசமறுந்து போகுதுகள்.

***மூப்பர்:-*** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.



## செய்வினை எனும் சூழ்ச்சியில் வீழ்ந்து விடாமல் இருமினே!

***சாத்திரியார்:-*** எங்கட சனங்களில பெரும்பாலானவர்கள் பேய், பிசாசு, செய்வினை, சூனியம் இதுகளில நம்பிக்கை வைத்து நாசமறுந்து போகினம்.

அதிலும் இப்ப மருத்தீடு எண்டு சொல்லி ஏகப்பட்ட காசுகளை சிலர் வசூலிச்சுப் போடுகினம். அறியாமையும் ஏழ்மையும் சேர்ந்து செய்வினை, சூனியம் எண்ட சூழ்ச்சிக்குள்ள வீழ்த்தி, கடைசியில மன நோய்க்கு ஆளாகி அலையிற நிலைமைதான் இருக்குது.

***மூப்பர்:-*** அதுக்கும் சுடலையில தாட்ட சிறுமியின்ர உடலைத் தோண்டி எடுப்பதற்கும் என்ன சம்பந்தம்.

***சாத்திரியார்:-*** உயிரிழந்தவர்களின் உடலை எடுத்து, மாந்திரிகம் செய்யிற ஒரு முறைமை மந்திரவாதி களிட்ட இருக்குது.

ஏன் தென்பகுதியில பல இடங்களில புதையல் தோண்டுவதற்காக குழந்தைப் பிள்ளைகளை நர பலி கொடுக்கிற சம்பவங்கள் நடக்குதல்லோ. அப்படியானதொரு வேலைக்காகத்தான் வவுனியாவிலும் அந்தச் சின்னப் பிள்ளையின்ர உடலை எடுத்திருப்பினம்.

***சிறாப்பர்:-*** அப்ப இது தொடர்பில இன்னும் பொலிஸார் தேடுதல் நடத்தவில்லையோ.

***பண்டிதர்:-*** அதெங்க நடக்கப்போகுது. வடக்கு-கிழக்கில இருக்கிற பொலிஸார் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவதற்காகவல்லோ இருக்கினம்.

***சிறாப்பர்:-*** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

***பண்டிதர்:-*** இந்தாப்பாருங்க, நாட்டில எத்தனையோ பிரச்சினைகள் இருக்குது. அதிலும் குறிப்பாக போதைவஸ்து வியாபாரம் இஞ்ச கண்ட பாட்டில நடக்குது. இருந்தும் ஒரு சிலர் அகப்படுகினமே தவிர, பெரும் வியாபாரிகள் தங்கட பிஸ்னஸைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு தானே இருக்கினம்.

ஆனால் இஞ்ச இருக்கிற காவல்துறையினர் தியாக தீபம் திலீபனை நினைவேந்தக் கூடாது என நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யினம்.

இந்த மண்ணில 12 நாட்கள் உண்ணா நோன்பிருந்து தன் உயிரை ஆகுதியாக்கிய ஓர் அகிம்சைவாதிக்கு அஞ்சலி செலுத்திறதுக்கே தடை விதிக்க வேணுமெண்டு நீதிமன்றுக்குப் போற பொலிஸாரால, செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய முடியாமல் தானே போகும்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவ, அந்நேரம் பார்த்து பண்டிதரின் கருத்தைத் தானும் ஆமோதிப்பதுபோல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுச் சென்றனர்.

**ஆதித்தன்**



வண்ணை பெருமாள் கோயிலுக்கு ரூ.200,000 நன்கொடை வழங்கிய போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊரெழுவைச் சேர்ந்த தமிழன் சிங்கப்பூர் ஜனாதிபதியாகிறார். இங்குதமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடி அடிவிழுகிறதே?

**யோகன் — துன்னாலை**

**நீதி அரசர் சி.வி.விக்னேஸ்வரனின் அழைப்புக்கு தமிழ் தலைவர்களின் பதில் என்ன?**

எமது அரசியல் தலைவர்கள் சுயநலம் படைத்தவர்கள். அவர்களுக்கு தமிழ் மக்கள் மீது கொஞ்சமும் அக்கறை இல்லை. அவர்களின் ஒரே நோக்கம் எது தெரியுமா? அடுத்த தேர்தலில் எப்படி வெல்வது, தனக்கு முன்னுக்கு இருப்பவரை எப்படி வெட்டி ஓடுவது, தான் எப்படி வாழ்நாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆவது, தனது வங்கிக் கணக்கை எவ்வாறு ஏற்றுவது, அரச சொகுசு வாகன போமிட்டை எப்படி வாங்குவது? அதை யாருக்கு விற்பது? எத்தனை கோடிக்கு விற்பது?
இந்த சிந்தனையைக் கொண்டவர்களால் தமிழினத்துக்காக ஒன்றுபட முடியுமா? அவ்வாறு ஒன்றுபட்டாலும் அந்த ஒன்றுபடல் எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்?

**சுரேசன் — பத்தமேனி**

**பொது நோக்குடன் மழை வேண்டி கொடும் பாவி எரிக்கும் வழமை இல்லாது போய் விட்டதே வியாசரே?**

சுரேசன் இப்போதைய நவீன உலகம் சுயநலம் என்ற போர்வையில் போர்த்திய உலகம். இங்கு அன்பு,கருணை, ஈகை, பொதுநலன்,சேவை மனப்பாண்மை இவை எதற்கும் இடமே இல்லை.
முன்பு மழை பொய்த்துப் போனால் கொடும் பாவி சாகாளோ கோடி மழை பெய்யாதோ என பாவை எரித்து மழை வேண்டிய பொதுநல உலகின் காலம்.
இப்போ கடவுளே நாளைக்கு மகளுக்கு சாமத்திய வீடு. மழை வந்திடக் கூடாது என தேங்காய் அடித்து நேர்த்தி வைக்கும் சுயநல உலகம். இதற்கு நடுவில் நாம் சிக்கி சின்னாபின்ன மாகிறோம்.

**கனேஷ் — பருத்தித்துறை**

**குருந்தூர் மலை ஆதிசிவனை வணங்க முடியவில்லை. ஆனால் கனடாவில் அமைச்சராக, சிங்கப்பூரில் ஜனாதிபதியாக தமிழர்கள் பவனி வருகிறார்களே?**

தம்பி கணேஷ். இது சிங்கள பௌத்த பூமி.இங்கு அவர்கள் வைத்தது தான் சட்டம். அவர்கள் வரைந்தது தான் வரலாறு. அவர்கள் சொல்வது தான் உண்மையானது. அவர்களின் கலாசாரம் தான் தொன்மையானது.
மாம்பழத்திற்காக தம்பியை மயிலேறி உலகைச் சுற்ற அனுப்பிவிட்டு அம்மை அப்பனைச் சுற்றி வந்து பழம் பெற்ற உனக்கு இது புரியவில்லையே.
ஈழத்தமிழன் உலக நாடுகளில் எந்தப் பெரிய பதவியிலும் அமரலாம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் இலங்கையில் பெரும்பான்மை இனத்துவேசம் படைத்தவர்களின் காலடியில் கிடக்க வேண்டும் புரிகிறதா?





அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**திகான் — வடமராட்சி**

**அன்பின் வியாசரே உங்கள் உடல் கட்டழகின் இரகசியம் என்னவென்று கூற முடியுமா?**

உணவு உடலுக்கு போதுமான சக்தியை வழங்குவதற்கானதே தவிர அது வயிற்றை நிறைக்கும் பொருள் அல்ல.
பலரின் பிரச்சினையே இது தான். நாவிற்கு ருசி பார்த்து வயிற்றை நிறைத்து அது வழமையாகிப்போக நாற்பது கடக்க முன்பே உலகத்து நோய்கள் அத்தனையும் உடலில் தங்கி விடும்.
முதலில் உணவகங்களில் தேவையின்றி உண்பதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.
காய்கறி, இலைக்கறிவகை, பழங்கள், கொட்டை வகைகள் போன்ற உணவை அதிகம் எடுத்து மாப் பொருளை அறவே தவிர்த்து, சோற்றை அளவோடு குறைத்து, காலையில் கட்டாயம், மதியத்தில் அளவோடு, இரவில் அதிலும் அரை வாசி உண்டால் மனிதன் ஆரோக்கியத்துடன் நூறு ஆண்டு வாழ்வான்.
இது இந்த வியாசரின் அனுபவம். அதையே கூறுகிறேன்.



தியாகதீபம் திலீபனின் ஊர்திப் பவனி மீதான தாக்குதல் தொடர்பாக கூற முடியுமா?

**சுதன் — குப்பிழான்**

**ஊரெழுவைச் சேர்ந்த தமிழன் சிங்கப்பூர் ஜனாதிபதியாகிறார். இங்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடி அடி விழுகிறதே?**

உலகளவில் ஈழத் தமிழன் ஒரு நல்ல நிலைக்கு வந்தால் அது பலருக்கு பிடிப்பதில்லை.அதை இருட்டடிப்புச் செய்வதில் மிகத் தீவிரம் காட்டுவர். அந்தவகையில் இந்தியாவின் தந்தி ரீ.வி அவரை இந்தியவம்சாவளி தமிழன் என்று கூறி வருகிறது.
ஜூனியர் விகடன் அவரை தமிழன் என்று கூறியிருக்கின்றதே தவிர ஈழத்து தமிழன் அல்லது இலங்கைத் தமிழன் என்றேனும் கூறவில்லை. என்ன செய்வது ஈழத்தை வைத்து அரசியல் செய்யத் தெரிந்தவர்களுக்கு ஈழத் தமிழன் வளர்ச்சியை பாராட்ட முடியவில்லை என்பது தான் வேதனை.
அது சரி தமிழ் எம்.பிக்களுக்கு தடியடியா? அது அடுத்த தேர்தலில் வெல்வதற்கான நாடகம் என்பது ஏன் உங்களுக்கு புரியவில்லை.

**சிவகாமி — பருத்தித்துறை**

**தியாகதீபம் திலீபனின் ஊர்திப் பவனி மீதான தாக்குதல் தொடர்பாக கூற முடியுமா?**

தமிழினத்தின் மீதான சிங்கள மக்களின் பார்வை எவ்வாறு இருக்கிறது என்பதற்கு தியாக தீபம் திலீபனின் ஊர்தி மீதான தாக்குதல் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.
ஐந்து அம்சக்கோரிக்கைகளை இந்திய அரசிடம் முன் வைத்து நீர் கூட அருந்தாது நல்லூர் முன்றலில் துடித்துத் துடித்து மரணித்துப் போனவன் தியாகதீபம்.
தான் கொண்ட கொள்கையில் சற்றும் தவறாது இறுதிவரை தன் இனத்துக்காக அறவழியில் போரிட்டு மரணித்துப்போன ஒரு உன்னத மனிதனின் ஊர்தி உங்கள் கண்ணுக்கு பயங்கரவாதிகளின் ஊர்தியாகத் தெரிகிறது எனின் நிச்சயம் உங்கள் பார்வையில் தான் தவறு இருக்கிறது.
உங்களை நீங்கள் திருத்தாத வரை தமிழினத்தின் உரிமைகள் எப்போதும் கிடைக்காது என்பது மட்டும் உண்மை.

**மதுவன் — மீசாலை**

**தன்னை ஒரு அறிவாளி என நினைக்கும் ஒரு முட்டாள் பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

இந்த உலகத்தில் இருக்கும் பலரின் பிரச்சினை இது தான்.
எல்லாம் தனக்குத் தெரியும் என்ற எண்ணம் நிச்சயம் எதுவுமே அவருக்குத் தெரியாது என்பதான முடிவையே தரும்.
எங்கும் எதிலும் தானே முதல்வன் எனும் மன நிலை மனிதனை மிருகத்திலும் மோசமான தாய் மாற்றிவிட்டது.
வெறும் புத்தகப் பூச்சிகளாய் புத்தகங்களைச் செல்லரித்துக் கொண்டு புத்தக மடிப்புக்குள் முடங்கிக் கிடப்பது தான் அறிவு என நினைக்கும் முட்டாள்களை; கிணற்றுத் தவளை என்று கூடக் கூற முடியாது. ஏனென்றால் அதுக்குக் கூட அந்த கிணற்றின் அளவு அறிவு இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: பணம் படைத்தவன்**
**பாடகர் : டி.எம்.சௌந்தராஜன்**
**இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்,டி.கே. ராமமூர்த்தி**
**இயற்றியவர்: வாலி**



கண் போன போக்கிலே கால் போகலாமா?
கால் போன போக்கிலே மனம் போகலாமா?
கண் போன போக்கிலே கால் போகலாமா?
கால் போன போக்கிலே மனம் போகலாமா?

மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?
மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?
மனிதன் போன பாதையை மறந்து போகலாமா?
மனிதன் போன பாதையை மறந்து போகலாமா?

கண் போன போக்கிலே கால் போகலாமா?
கால் போன போக்கிலே மனம் போகலாமா?

நீ பார்த்த பார்வைகள் கனவோடு போகும்
நீ சொன்ன வார்த்தைகள் காற்றோடு போகும்
நீ பார்த்த பார்வைகள் கனவோடு போகும்
நீ சொன்ன வார்த்தைகள் காற்றோடு போகும்

ஊர் பார்த்த உண்மைகள் உனக்காக வாழும்
உணராமல் போவோர்க்கு உதவாமல் போகும்
உணராமல் போவோர்க்கு உதவாமல் போகும்

கண் போன போக்கிலே கால் போகலாமா?
கால் போன போக்கிலே மனம் போகலாமா?

பொய்யான சில பேர்க்குப் புது நாகரீகம்
புரியாத பல பேர்க்கு இது நாகரீகம்
முறையாக வாழ்வோர்க்கு எது நாகரீகம்
முன்னோர்கள் சொன்னார்கள் அது நாகரீகம்
முன்னோர்கள் சொன்னார்கள் அது நாகரீகம்

கண் போன போக்கிலே கால் போகலாமா?
கால் போன போக்கிலே மனம் போகலாமா?

திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்?
வருந்தாத உருவங்கள் பிறந்தென்ன லாபம்?
இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்

கண் போன போக்கிலே கால் போகலாமா?
கால் போன போக்கிலே மனம் போகலாமா?

# சமூகத்தை சிதைக்கும் சீனவெடிக் கலாசாரம்

1960 களில் ஊரில் யாராவது மரணம் அடைந்தால் அந்த ஊரே துக்கமயமாகிவிடும். இறந்தவரின் அந்தியேட்டி கிரியைகள் முடியும் வரை அந்த ஊரில் என்ன நல்ல காரியமும் நடைபெறாது.

அந்தளவிற்கு மற்றவரின் துன்பத்தில் பங்கு கொண்டு வாழ்ந்தார்கள் எம் முன்னோர்கள்.

ஆனால் இன்றைய காலம் அவ்வாறில்லை. இது நவீன யுகம். இப்போது இருக்கும் சமூகத்திற்கு அயல் வீட்டில் யார் இருக்கிறார் என்றே தெரியாது.

அயல் வீடுகளில் நடைபெறும் நல்லது, கெட்டதில் கலந்து கொண்டு உறவை மேம்படுத்தும் பழக்கம் அற்றுப் போய்விட தாமும் பாழாய்ப் போய் பிள்ளைகளையும் புத்தகப் பூச்சிகளாய் வளர்த்து அழிவை நோக்கிய ஆரோக்கியமில்லாத சமூகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஊரில் மரண வீடு ஒன்று நடந்தால் அங்கு உறவுகள் ஒன்று கூடுகிறார்களோ இல்லையோ போதைக்கு அடிமையான ஒரு கூட்டம் ஒன்று கூடிவிடும்.

குறித்த வீட்டில் தமது குடும்ப உறுப்பினரை இழந்து அந்தக் குடும்பம் அந்தரித்துக் கொண்டிருக்கும்.

அவர்களுக்கு ஆறுதல் கூற ஆளே இருக்காது. ஆனால் அயல் வளவில் மதுவிருந்து நடந்து கொண்டிஇருக்கும்.

யாரும் ஏதும் கேட்டால் கதை முடிந்துவிடும். "நாங்கள் இறந்தவரின் நெருங்கிய உறவுக்காரர். எங்களுக்கு சரியான கவலை. அதனால் தான் குடிக்கின்றோம்" என கடுப்பேற்றும் தன்னிலை விளக்கம் தருவார்கள்.

சரி குடித்து விட்டுப் போகட்டும் என்று விட்டால் அதுதான் இல்லை.

அந்த மரண வீட்டில் ஏற்படும் முறுகல் நிலைகளுக்கு முக்கால் பங்கு இந்த மதுப் பிரியர்களாகத் தான் இருப்பார்கள்.

ஐயர் கிரியைகள் செய்யும் போது குறுக்கிடுவது, பிரேதத்தை கிரியைகள் முடிந்து தூக்கும் போது பிரேதப் பெட்டியை மூடுவது, முட்டி மோதுவது என ஏதோ சண்டையிடும் ஆட்கள் போல் மற்றவர்களை அதட்டுவது என பெரும் அடகாசம் செய்வார்கள். இவர்களின் தலையீடு மரண வீட்டுக்கு உரித்துடையவர்கள் முதல் ஏனையவர்கள் வரை வெறுப்பேற்றுவதாய் அமைந் திருக்கும்.



அதிலும் எமது காலாசாரத்தில் புதிதாய் நுழைந்திருக்கும் சீனவெடிக் கலாசாரத்தை கட்டிக் காப்பாற்றுவோர்கள் இவர்களாகத்தான் இருக்க முடியும்.

அந்தளவிற்கு வெடி கொழுத்துவதில் இவர்களின் அட்டகாசம் மேலோங்கி நிற்கும்.

இதை விட பறைமேளம், பான்ட் வாத்தியத்தை ஒவ்வொரு சந்தியிலும் வைத்து மணித்தியாலக் கணக்கில் வாசிக்க வைப்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

இறந்த ஓர் ஆத்மாவை அதற்கேற்ற மரியாதையுடன் கொண்டு சென்று அடக்கம் செய்வதே மனிதம்.

ஆனால் எம்மவர்களின் செயற்பாடுகள் இறந்தவர் மேல் அனுதாபத்தை ஏற்படுத்தாமல் வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் இருப்பது தான் வேதனை.

"திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என கண்ணதாசன் பாடியிருப்பார். இதைத்தான் இவர்களுக்கும் கூறிவிட முடியும்.

தமது குடும்ப உறுப்பினரை இழந்து தவிக்கும் அந்தக் குடும்பத்தை அவரின் உறவுகளை, அவர்களின் மனநிலையை ஒரு கணம் சிந்தித்து பாருங்கள்.

உங்களை நீங்களே திருத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் உங்களால் கடத்தப்படுவதுதான் அடுத்த சந்ததியைச் சென்றடையும்.

இந்த அருவருக்கத்தக்க கலாசாத்தை எடுத்தெறியுங்கள். காலமானவரை காலதாமதமின்றி இடுகாடு எடுத்துச் செல்வோம்.

இதுவே அவர் ஆத்மாவை சாந்தியடையச் செய்யும்.

மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கே போன ரயில்...

உலகின் மர்ம தேசங்களைப் பட்டியலிட்டால், இரும்புத்திரை நாடான ரஷ்யாவும் ஏவுகணை தேசமான வடகொரியாவும் முதல் இரண்டு இடங்களைப் பிடித்துக்கொள்வது உறுதி. இந்த இரு மர்ம தேசங்களின் தலைவர்களான ரஷ்ய ஜனாதிபதி புடினும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் நடத்திய சந்திப்பு உலக அரங்கில் பரபரப்பைக் கொளுத்திப்போட்டிருக்கிறது. உக்ரைன்மீது போர் தொடுத்திருக்கும் ரஷ்யாவும், தென்கொரியாமீது போர் தொடுக்கும் எண்ணத்தில் ஒத்திகைகள் பார்த்துக்கொண்டிருக்கும் வடகொரியாவும் கைகோர்த்தது எதற்காக?

பாதுகாப்புக் காரணங்களுக்காக, தன் தந்தை, தாத்தா வழியில் பெரும்பாலும் ரயில் பயணங்களையே மேற்கொள்வார் வடகொரிய ஜனாதிபதி கிம். பல்வேறு சொகுசு வசதிகளைக்கொண்ட கிம்மின் ரயில், 90 பெட்டிகள் கொண்டது. பாதுகாப்பு ஆயுதங்களும், தப்பிச் செல்ல ஹெலிகொப்டரும் அந்த ரயிலுக்குள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பலத்த பாதுகாப்புக் கவசங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் இந்த ரயில், மணிக்கு 59 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்லும். குண்டு துளைக்காத அந்த ரயிலில் சுமார் 20 மணி நேரம் பயணித்துத்தான் ரஷ்யாவை அடைந்திருக்கிறார் கிம்.

அவருக்கு ரஷ்யாவின் காசன் (Khasan) ரயில் நிலையத்தில் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் வாஸ்டாச்னி நகரிலுள்ள விண்வெளி மையத்தைப் பார்வையிட்ட கிம், பிஸியான வேலைகளுக்கு நடுவே எங்களை அழைத்ததற்கு நன்றி எனச் சொல்ல, பதிலுக்கு வடகொரியா தோன்றி 75 ஆண்டுகள் நிறைவு பெற்றதற்கு வாழ்த்துகள் என்றிருக்கிறார் புடின். அப்போது,புனிதப் போரை நடத்திக் கொண்டிருக்கும் ரஷ்யாவுக்கு எப்போதும் நாங்கள் முழு ஒத்துழைப்பைக் கொடுப்போம். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இணைந்து போராடுவோம என்று சொல்லியிருக்கிறார் கிம்.

விண்வெளி மையத்தை இருவரும் பார்வையிட்ட பிறகு நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில், கிம், ராக்கெட் தொழில்நுட்பத்தில் பெரும் ஆர்வம்கொண்டிருக்கிறார். விண்வெளி மையம் அமைக்க வடகொரியா முயன்று கொண்டிருக்கிறது. அதற்கான விண்கலங்களைத் தயாரிக்க, வடகொரியாவுக்கு வேண்டிய உதவிகளை ரஷ்யா செய்யும் எனப் பேசியிருக்கிறார் புடின்.

இதையடுத்து ஆயுதங்களைப் பரிமாறிக் கொள்ளத்தான் இந்தச் சந்திப்பு. வடகொரியாவிடம் ஆயுதம் வாங்கினால், கடுமையான விளைவுகளை ரஷ்யா சந்திக்கவேண்டியிருக்கும் என்று அமெரிக்கா எச்சரித்திருக்கிறது.

ரஷ்ய அரசியலை உற்றுநோக்குபவர்களோ, வடகொரியாவிடம் ஆயுதம் தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல்கள், உளவு பார்க்கும் செயற்கைக் கோள்கள் ஆகியவை இல்லை. எனவே, இவற்றைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை ரஷ்யா, வடகொரியாவுக்குக் கொடுக்கக்கூடும். அதேபோல, உக்ரைன் போரில் போதிய ஆயுதங்கள் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் ரஷ்யாவுக்கு, வெடிமருந்து, ஏவுகணைத் தடுப்பு பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை வடகொரியா வழங்கும் எனத் தெரிகிறது. இந்த ஆயுத, தொழில்நுட்பப் பரிமாற்றம் நடந்தால் உக்ரைன் போர் மேலும் தீவிரமடையும். தென்கொரிய எல்லையிலும் பதற்றம் அதிகரிக்கும என எச்சரிக்கிறார்கள்.



# லிபியாவை புரட்டிப்போட்ட ‘சுனாமி’ வெள்ளம்

வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவில் சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் சுமார் 3,000 உயிர்களைப் பலிகொண்டது. அதே வட ஆபிரிக்காவில் அமைந்திருக்கும் லிபியா நாட்டில் பெருவெள்ளத்தால், இப்போது ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றனர்.

அண்மையில் லிபியா நாட்டைச் சூழ்ந்திருந்த டேனியல் புயல் கரையைக் கடந்தது. அன்றிரவு பெய்த மழையால், கடற்கரை நகரமான டெர்னாவில், சுனாமிபோல புகுந்த வெள்ளநீர் அங்கிருந்த கட்டடங்களை அடித்துச் சென்றது. அதிகாலை 3.30 மணியளவில் ஏற்பட்ட இந்த வெள்ளம் டெர்னா என்றொரு நகரத்தைத் தடமே இல்லாமல் அழித்துவிட்டது. திரும்பும் திசையெல்லாம் சரிந்த கட்டடங்களும், பிணக்குவியல்களும், மரண ஓலங்களுமே டெர்னா முழுவதும் நிறைந்திருக்கிறது.

வெள்ளத்தில் தப்பித்திருந்த சில கட்டடங்களும் அடுத்தடுத்த நாட்களில் சரிந்தன. வெள்ளநீரால், மக்கள் பல கி.மீ தூரம் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். வெள்ளத்துக்கு முன்பும் பின்பும் எடுக்கப்பட்ட சாட்டிலைட் புகைப்படங்கள் டெர்னா நகரத்தின் அவலநிலையை விளக்குகின்றன. கனமழையால், இரண்டு அணைகள் உடைந்தது தான் இந்தக் கொடூரங்களுக்குக் காரணம்.

இந்தப் பெருவெள்ளத்தால் 11,300 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று கணிக்கப்பட்டிருந்த நிலையில், "3,598 பேர் மரணமடைந்துவிட்டனர். சுமார் 9,000 பேரைக் காணவில்லை" என்றிருக்கிறது உலக சுகாதார நிறுவனம் "மீட்புப் பணிகள் முழுவதுமாக நிறைவடைந்த பிறகே உயிரிழப்பு எண்ணிக்கையில் ஒரு தெளிவு கிடைக்கும்" என்கிறார்கள் டெர்னா நகர அதிகாரிகள். டெர்னாவிலிருந்து சுமார் 900 கி.மீ தூரத்திலிருக்கும் எகிப்தின் அல்-ஷரீஃப் (AL-Sharif) கிராமத்திலும் இந்தப் பெருவெள்ளம் பாதிப்பை உண்டாக்கியிருக்கிறது. அங்கும் 75இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கின்றனர்.

லிபியாவின் உள்நாட்டு ஊடகங்கள் சில, எப்போதும் வறண்டு காணப்படும் ஹவாடி டெர்னா (Wadi Derna) அணை, கனமழையால் நிரம்பி வழிந்தது. முதலில் மேல் அணை உடைந்து, வெள்ளப்பெருக்கு கீழ் அணையை நோக்கித் திரும்பியிருக்கிறது. பின்னர் கீழணையும் உடைய, சுனாமி போலப் பாய்ந்து வந்த வெள்ளநீர் டெர்னா நகரை துவம்சம் செய்துவிட்டது. வலுவிழந்த அந்த அணையைச் சரிசெய்ய, 10 ஆண்டுகளுக்கு மேலாக நிதி மட்டும் ஒதுக்கப்பட்டுவருகிறது.

ஆனால், அந்த நிதி எதுவுமே அணையை பலப்படுத்தப் பயன்படுத்தப்படவில்லை. அரசின் அலட்சியப் போக்குதான் இந்தக் கோரச் சம்பவத்துக்குக் காரணம். இதை இயற்கைப் பேரிடராக மட்டும் கருத முடியாது. மனிதத் தவறால் நடந்த மிக மோசமான பேரிடர் என்று பதிவுசெய்திருக்கின்றன.

அரசின் மெத்தனமும், அரசியல்வாதிகளின் சுயநலமும் மனித உயிர்களை எப்படிக் காவு வாங்கும் என்பதற்கு லிபியா பேரிடர் மற்றுமோர் உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மொழியாம் எம் தமிழ் மொழி

தொல்லியல் தந்த தொன்மை மொழி
தொன்று தொட்டு வளர்ந்த மொழி
பல்கிப் பெருகிய பண்டை மொழி
பலரும் பருகிய உயர்ந்த மொழி

இலக்கிய இலக்கணம் கொண்ட மொழி
இலகுவில் புதுமைகள் படைக்கும் மொழி
நீதி நூல்கள் தந்த மொழி , உயர்
நீண்ட காப்பியங்கள் செய்த மொழி

தொகை நூல்கள் எட்டும் பாட்டுக்கள் பத்தும்
தொன்மையை விளக்கும் சான்று மொழி
தொல்காப்பியம் தந்த உயர்ந்த மொழி என்றும்
தொலைவின் எல்லையை உணர்த்தும் மொழி

தமிழும் சைவமும் இணைந்த மொழி
தரணியில் என்றும் மூத்த மொழி
தன்னிகரில்லா தாய்மை மொழி
தனித்து நிற்கும் தூய மொழி


வள்ளுவன் கண்ட புதுமை மொழி
வானுயர்ந்த கலைகள் படைத்த மொழி
உள்ளுயர் சிந்தனை கொண்ட மொழி
உலக மொழிகளை வரித்த மொழி

சொல் வளம் சேர்த்த சொந்த மொழி
சொல்லிலடங்கா தகுதி பெற்ற மொழி
தன்னிலை விளக்கும் தண்மை மொழி
தன்னிகரில்லா உயர் செம்மொழி

பிரேமாதியா ,யாழ்ப்பாணம்.



## அன்பு வாழ்வு



தொல்லுலகம்
செல்வதற்குள்ளேயே
மல்லுக்கட்டல்கள்
தொல் பொருட்கள்
தொல்லை தந்ததில்லை
தொலைந்து போகும் வாழ்க்கை
இல்லையென இனி பிறவி
வல்லவன் வகுத்த வழி
தொல் பொருள்களால்
சொல்லின் வலிகள்
நிகழ்காலமே வாழ்வு
அன்பின் தொல்பொருள்
அடி மனதில் தோண்டி
அன்பு வாழ்வு பெறுவோம்

தமிழினியன்.

## நீளும் நாட்கள்!

காலம் உதைக்கும்
காற்பந்தாக
இந்த வாழ்க்கை

மீண்டும் மீண்டும் காலத்தின்
எல்லைக்குள் தள்ளி –புள்ளிகளை
அள்ளிவிட வேண்டுமென்ற
பேராவலாய் நீளும் நம் நாட்கள்

முன்னால் பின்னால்
இரு பக்கங்களிலுமாக
காலம் உதைக்க தொப்புள்
கொடி சுற்றிய குழந்தையாய்
திணறி முழிக்கிறது விட்டெறிந்த
வாழ்க்கைப் பந்து

கொஞ்சமாய் எச்சரிக்கப்படுவதும்
சில வேளைகளில்
வெளியேற்றப்படுவதிலிருந்தும்
கற்றுக் கொள்கின்றோம்
புதிய விதியை


முன்னும் பின்னுமாய் முரண்பட்டு
கொண்டே நகரும் வாழ்க்கையில்
அவ்வப்போது பந்தில் ஒட்டிய
சேறு முகத்திலே பட்டுத் தெறிக்க
வாழ்வின் சேதாரம்
கணக்கிடுகின்றோம்

இன்னும் இன்னும்
அசிங்கங்கள் இறைந்து கிடக்கும்
ஒவ்வொரு முகங்கள் கண்டு
தெளிகிறோம்

ஒட்டிக்கொள்ளும் புழுதியை
தட்டிக் கொண்டே
நன்றியை உதிர்த்து விட்டு
நெருடல்களை சுமக்கும்
ஒவ்வொருவர் வாழ்க்கையையும்
ஒவ்வொருவராய்
கடக்கக் கற்றுக் கொள்கின்றோம்

சங்கரி சிவகணேசன்.

## மௌனத்தின் தேடல்- 687



## ஆண்டவன் படைப்பு

ஆறறிவு கொண்ட மனிதப் பிறப்பு
தெருவோரத்தில் ஒருசாண் வயிற்றுப்
பசிக்காக உணவினை உண்ணும் காட்சி
ஊனமுற்ற அனாதரவற்ற சிறுவன்
ஆண்டவன் படைப்பின் ஓர் வஞ்சகமோ!

க. திருமகள் ,
பண்டத்தரிப்பு.

## மனிதமும் புனிதமும்

கொடுமையில் மிகவும்
கொடுமையானது இளமையில்
வறுமை இதை நன்கு உணர்ந்து
உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோராவார்
இவ்விரு கூற்றையும் சிறிது
சிந்தித்தால் இதயம் இனியதாகும்
மனிதமும் புனிதமாகும்

க.நாகராசா,
நுணாவில்.

## மௌனத்தின் தேடல்- 688




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஈன்றவர் ஈனராகி

ஈன்றெடுத்த பெற்றோர்
இச்சை வெறியால்
வேறு வேறு பாதை செல்ல
தனித் தளிரான பிஞ்சின
பசிக் கொடுமைக்கு
விசம் கிடைத்தாலும்
விழுங்க வேண்டிய அவலத்தில்
வாழும் மழலை நாளை?

சி.இ. அன்புதுறை
மானிப்பாய்.

## ஆதங்கம்

அரும்பசியாற்ற உணவும்
தாகத்திற்கு நீரும்அன்பாய் அரவணைத்து ஊட்டிடவும்
அள்ளிச் சாப்பிடும் முறைதனை சொல்லிடவும்
அன்னையவள் எனக்கில்லையே
உற்றார் உறவினர் இருந்தும் கூட
உதவி செய்ய யாருமில்லையே
பணத்திற்கு இருக்கும் மதிப்பு கூட
பாசத்துக்கு இல்லையே என்ற
இளந்துளிரின் ஆதங்க தவிப்பினை
இறைவா நீயும் பாராமுகம் காட்டுதல் முறையாகுமா?

ஆ.செல்வி ,
திருநாவலூர்.

## வறுமையின் கொடுமை

ஒரு வேளை உணவுக்காய்
ஏங்கும் மனதுஏழையின்
குடிலில் இதுவே நியதி
உதவிட பலர் இருந்தும்
ஊனமாகிடும் அவர் உள்ளம்
உயர்ந்திட நீ விரும்பின்
தடைகளை உடைத்தெழு மகனே!

வி. ரம்மியா ,
கல்வியங்காடு.

## இயல்பு நிலை

சம்மணம் போட்டு தரையில் இயல்பாய் அமர்ந்திருந்து
வட்டிலில் உள்ள உணவு தனை பக்குவமாய்
தன் சிறு கையால் கிள்ளி எடுத்து தன் வாயில்
வைத்து உண்ணும் இச்சிறுவனின் செயற்பாடு
தன் கையே தனக்குதவி என்பதன் எடுத்துக்காட்டே!

சி.இ .மகாலட்சுமி,
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 78

# கடல்புறா

## சதுரங்கக் காய்கள்

கண்களில் கனவு படர்ந்து லாவ, கால்களை அலைகள் தடவிச் செல்ல, உணர்ச்சிகள் உள்ளத்தைக் குலுக்கி எடுக்க, தன் மதி சொன்ன கதையைக் கூறத் துவங்கி மஞ்சளழகி, கதையை உடனே துவங்காமல் நீண்டநேரம் கண் கொண்ட மட்டும் கடலின் நீர்பரப்பையே கவனித்துக் கொண்டிருந்தாள். சற்று நேரம் கழித்து எதையோ நினைத்துக் கொண்டு மெல்லச் சிரிக்கவும் செய்தாள்.

அவள் அழகிய இடையை இழுத்து அணைத்த இடது கையை எடுக்காமலும் இன்பச் சுழலில் சிக்கியும் கிடந்த இளையபல்லவனும் அக்கம் பக்கத்தை மறந்து கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்ததனாலும் அவள் சிரிப்பின் விளைவாகக் கனவிலிருந்து சற்றே விடுபட்டு, "ஏன் சிரிக்கிறாய் மஞ்சளழகி?" என்று வினவினான்.

மஞ்சளழகி நீட்டிய தன் கால்களைப் பாதி தூரம் மடித்துத் தன் கைகளைச் சேர்த்து முழந்தாள்களைக் கட்டிக் கொண்டு, "என் நிலையை நினைத்துச் சிரித்தேன்." என்று கூறினாள். அவள் சொற்கள் உள்ளத்தே எழுந்து கொண்டிருந்த உணர்ச்சிகளையும் கனவையும் நன்றாகப் பிரதிபலிக்கவே அவள் மனம் பெரிதும் குழம்பியிருக்கிறது என்பதை மட்டும் இளையபல்லவன் புரிந்து கொண்டானானாலும் அந்தக் குழப்பத்துக்குக் காரணம் எதுவாயிருக்கும் என்பதை மட்டும் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லையாகையால், "ஏன்?, உன் நிலைக்கு, என்ன குறைச்சல்?" என்று வினவினான்.

தன் வாழ்வைப் பற்றிய எண்ணங்களில் இதயத்தைப் பறிகொடுத்திருந்த மஞ்சளழகி தன் கையால் அவன் முகத்தைத் திருப்பி, "இதோ என் முகத்தைப் பாருங்கள்," என்று கூறினாள். அவள் எழில் முகத்தை அவன் கண்கள் விழுங்கி விடுவன போல் பார்த்தன. "நன்றாகப் பாருங்கள்" என்று மீண்டும் அவள் கூறினாள்.

எதற்காக அப்படி உற்றுப் பார்க்கச் சொல்கிறாள் என்பதை அறியாத இளையபல்லவன், "நன்றாகத்தான் பார்க்கிறேன் மஞ்சளழகி! எத்தனை முறை பார்த்தாலும் தெவிட்டாத அமுதம் உன் முகம்" என்றான்.

அவள் இதழ்களில் மோகனப் புன்முறுவல் படர்ந்தது. "அழகை வர்ணிக்க உங்களைப் பார்க்கச் சொல்லவில்லை?" என்றாள் மஞ்சளழகி. அன்பும் உறுதியும் கலந்த குரலில்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாத இளையபல்லவன் சொன்னான்: "வேண்டுமென்று வர்ணிக்கவில்லை. உள்ளத்தில் எழுந்ததை உதடுகள் உதிர்த்தன. அவ்வளவுதான்."

"ஆண் பிள்ளைகளின் பசப்பு வார்த்தை" என்றாள் மஞ்சளழகி.

"ஆனால் கசப்பு வார்த்தைய ல்ல," என்று சுட்டிக்காட்டினான் இளையபல்லவன்.

மஞ்சளழகி பெருமூச்சு விட்டாள். "இனிப்பு வார்த்தைக்கும் காலம் இருக்கிறது."

"இது காலம் அல்லவா?"

"அல்ல"

"ஏன்."

பேச்சில்லாமலே இன்பத்தின் பிடியில் இருக்கிறோம்."

"அப்படியானால்..."

"முகத்தைப் பார்க்கச் சொன்ன காரணம் வேறு."

"என்ன காரணம்?"

"நேற்றைக்கும் இன்றைக்கும் குமுள்ள வேறுபாட்டைக் காணப் பார்க்கச் சொன்னேன்"

"என்ன வேறுபாடு?"

"உற்றுப் பாருங்கள் தெரியும்." இளையபல்லவன் அவள் முகத்தை நன்றாக உற்று நோக்கினான்.

(தொடரும்...)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 24

# ஓ, எந்திர மனிதனே

இன்று அதிகாலை மூன்று மணிக்கு ஜன்னல் வழியே வந்த ஒரு மழைவாசனையில் நான் விழித்துக் கொண்டேன்.

வெளியே தெரு விளக்கின் வெளிச்சத்தில் வந்து விழுந்து கொண்டிருந்தன வைரத் தாரைகள்.

இது என்ன? நான் விழித்துக் கொண்டே காணுகிற கனவா?

அந்த நேரத்தில் மின்னல் தீக்குச்சி கிழித்து மேற்கு வானம் அது மழைதான் என்று சிபாரிசு



செய்தது.

நானும் ஒரு புல்லாய்ப் புல்லரித்தேன்.

ஜன்னலோரம் நனையும் பூவாய்ப் புளகித்தேன்.

வானத்தை நோக்கிக் கை நீட்டிக் கொண்ட மழையை யாசித்துக் கொண்டிருந்த கிளைகளுக்கெல்லாம் இன்று கிளர்ச்சி.

கையில் டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டேன்.

உறக்கத்தையும் தலையணையையும் அணைத்துக்கொண்டு படுத்திருந்த என் மகனை எழுப்பினேன்.

உறக்கத்தையும் என்னையும் உதைத்துக் கொண்டே எழுந்தான்.

டார்ச் விளக்கின் வெளிச்சத்தை ஜன்னலுக்கு வெளியே வீசி, அவனுக்கு மழையின் முகம் காட்டினேன்.

என் தோள்களைக் கட்டிக் கொண்டான்.

உறக்க கரகரப்பு ஒட்டியிருந்த குரலில் 'அப்பா மழை! என்று எனக்கு மழையை அறிமும் செய்து வைத்தான்.

அந்த மகாகவி சோகப்பட்டதற்குச் சற்றும் குறையாமல் நானும் சோகப்படுகிறேன்.

நம் மனிதர்களின் இதயத்தில் இயற்கையை நேசிக்கும் பிரதேசம் இருண்டே கிடக்கிறது.

இவர்கள் சூரியயோதயத்தை பார்த்து கூட ஒரு ராத்திரியில்தான். அதாவது, திரைப்படத்தில.

இவர்களுக்கு அஸ்தமனத்தை அறிமுகப்படுத்தியதே பாலுமகேந்தராதான்.

நாம் வாழ்வது எந்திர வாழ்க்கை என்பதையும் நாம் பரபரப்பின் குழந்தைகள் என்பதையும் நாம் அறிவோம்.

அனால், அதேநேரத்தில் வாழ்வின் சின்னச் சின்னச் சந்தோஷங்கள் நம்மை கடந்து போகும்போது நாம் உறங்கிவிடுகிறோம்.

நம்மைச் சுற்றிச் சுற்றி நம் பார்வைகளை யாசிக்கும் சௌந்தர்யங்கள் புலபல.

எந்திர மனிதனே! அவற்றுக்காய் உன் மனத்தைச் சில நிமிடங்களாவது கடன் கொடு.

அதே, மரங்களின் மேல் நிறம் மாறும் தளிர்கள்!

உதிரும் திகதி தெரியாமல் உல்லாசமாயிருக்கும் மலர்கள்.

நட்சத்திரங்களின் இடைவெளிகள்!

நறுக்கிப்போட்ட நகமாயிருந்து ஒவ்வொரு சென்டிமீட்டராய் வளரும் நிலவு!

கரை நோக்கி வந்த தற்கொலை புரிந்து கொள்வதில் ஓர் அலை அடையும் ஆனந்தம்.

மின்சார ரயிலின் ஜன்னலோரத்துச் சந்தோஷம்!

மின்சாரம் இல்லாத இரவுகளில் மெழுகுவத்திச் சுடர்களின் நடனம்!

நகரத்தின் ராத்திரிச் சாலைகள்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

366

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## கருத்தரிப்பதற்கு முன் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயங்கள்

மகப்பேறு அல்லது குழந்தையை பெற்றெடுப்பது என்பது ஒரு பெண்ணிடம் மட்டும் தங்கியிருப்பதில்லை. இது, தம்பதியினரான ஆண், பெண் இருவரிலும் தங்கியுள்ளது. இதற்கு, உடல் ஆரோக்கியம் எந்த அளவு முக்கியமோ அந்த அளவுக்கு உள ஆரோக்கியமும் முக்கியமாகும்.

ஒரு பெண் கர்ப்பம் தரித்து, மருத்துவரை நாடும் போது, கர்ப்ப காலத்தில் எட்டு தொடக்கம் பன்னிரெண்டு வாரங்கள் ஆகின்றன. ஆனால், அதற்கு முன்பே பல விடயங்கள் நடந்தேறுகின்றன. கர்ப்பம் தரித்ததில் இருந்து, அதாவது கருக்கட்டியதில் இருந்து பன்னிரெண்டு வாரங்களுக்குள், குழந்தையின் பெரும்பாலான அங்கங்கள் உருவாகி முடிகின்றன.

கர்ப்பம் தரித்து நீங்கள் மருத்துவரை நாடும் போது, குழந்தையின் பெரும்பாலான அங்கங்கள் உருவாகி விடுவதால், கர்ப்பத்திற்கு முன், உங்களை தயார் செய்து கொள்வது மிகவும் முக்கியம். அது உடல் ரீதியாகவும் இருக்கலாம். அல்லது உள ரீதியாகவும் இருக்கலாம்.

ஒரு பெண், கர்ப்பம் தரிக்க நினைப்பதற்கு முன் பல்வேறு விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, உடல் நிறையில் கவனம் செலுத்த வேண்டும். உயரத்திற்கு ஏற்ற நிறையை கொண்டிருத்தல் அவசியம். அதனால், பொதுவாக உடல் நிறை, உடல் திணிவு சுட்டெண் மூலம் கணிக்கப்படுகிறது. ஒரு பெண்ணின் உடல் நிறையை கிலோகிராமிலும் உயரத்தை மீற்றரிலும் வைத்து உடல் திணிவுச் சுட்டெண் கணிக்கப்படுகிறது. 18.5 - 24.9 வரை சாதாரண உடல் திணிவுச் சுட்டெண் என கருதப்படுகிறது.

அதாவது, 18.5 ஐ விட குறைந்த உடல் திணிவுச் சுட்டெண் உடையவர்கள், நிறை குறைந்தவர்கள் என்றும், 24.9 ஐ விட கூடிய உடல் திணிவுச் சுட்டெண் உடையவர்கள், நிறை கூடியவர்கள் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள். ஒரு பெண்ணின் ஹோர்மோன் அளவிற்கும், அவர்களுடைய உடல் நிறைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

அதாவது, உடல் நிறை குறைந்த பெண்ணை எடுத்தால், அவர்களது உடற்சிறப்புகள், ஹோர்மோன் அளவுகள் மாற்றமடைந்து காணப்படலாம். இதனால், அவர்களது சூலக தொழிற்பாடு பாதிப்படைந்திருக்கலாம். அதன் காரணமாக அவர்களது மாதவிடாய் சக்கரத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். அதனால், கருத்தரிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம். கருத்தரித்தாலும் கூட, மிகவும் நிறை குறைந்த பெண்களுக்கு கருச்சிதைவோ அல்லது வேறு பிரச்சினைகளோ ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். உதாரணமாக, அவர்களுக்கு நிறை குறைந்த குழந்தை பிறக்கலாம், குறைமாதத்தில் குழந்தை பிறக்கலாம், குழந்தை பிறந்த பின்னர் குழந்தையை பராமரிப்பதில், பாலூட்டுவதில் சில பிரச்சினைகள் இருக்கலாம்.



நிறை குறைந்தவர்களுக்கு சூலகத் தொழிற்பாடு எந்தளவு பிரச்சினையாக இருக்கிறதோ அதே அளவு, நிறை கூடியவர்களுக்கும் அவர்களது ஹோர்மோன் செயற்பாடுகளால், மாதவிடாய் சக்கரம் குழப்பமடையலாம். அதோடு, Polycystic ovarian syndrome (PCOS) என்ற பிரச்சினை உடைய பெண்களின் நிறை கூடும் போது, அவர்களது பிரச்சினை மேலும் பன்மடங்காக அதிகரிக்கிறது. இதனால், அவர்கள் கருத்தரிப்பதில் மிகவும் சிக்கல் ஏற்படுகிறது. இவர்கள் கருத்தரித்தாலும் கூட, கருச்சிதைவிற்கான சந்தர்ப்பம் அதிகமாகும்.

அத்துடன், ஒரு நிறை கூடிய பெண் கருத்தரிக்கும் போது, அவர்களுக்கு நீரிழிவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது.

அதேபோல் உயர் குருதி அமுக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பமும் அதிகமாகும். அத்துடன் நிறை கூடிய பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் நிறை கூடியவையாக இருக்கின்றன. ஆகவே, அத்தகைய நிறை கூடிய குழந்தையை பிறப்பிப்பதிலும் பல சிக்கல்கள் ஏற்படலாம். சில சமயங்களில், நிறை கூடிய குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் கூட பிறப்பிக்கக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது.

ஆக நிறை கூடினாலும் பிரச்சினை ஏற்படுகிறது. நிறை குறைந்தாலும் பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே தான், கர்ப்பம் தரிப்பதற்கு முதல் உங்களுடைய நிறையை இயன்றளவு சாதாரண நிறையில் பேணுவது சிறந்தது. நிறை குறைந்தவர்கள், நிறையை கூட்ட வேண்டும். அதேபோல் நிறை கூடியவர்கள், நிறையை குறைக்க வேண்டும்.

இரண்டாவது, நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் கர்ப்பம் தரிப்பது குறித்து மிகவும் கவனம் எடுக்க வேண்டும். பலர் தமக்கு நாட்பட்ட நோய்கள் இருப்பது தெரியாமல் தான் கர்ப்பம் தரிக்கின்றனர்.

எமது சமூகத்தில் தற்போது பல இளம் பெண்கள் இரத்தச்சோகை நோய்க்கு ஆளாகியுள்ளனர். இது தவிர அவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், இதய நோய், வலிப்பு போன்ற பல்வேறு நோய்கள் காணப்படலாம்.

இந்த நோய்கள் இருப்பது அவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆகவே, கர்ப்பம் தரிக்க முன் இவற்றை சீர்செய்து, அதன் பின்னர் கர்ப்பம் தரித்தால் பல்வேறு பிரச்சினைகளை தடுக்கலாம். உதாரணமாக, இரத்தச் சோகை உடைய பல பெண்களுக்கு இரத்த வீதம் அல்லது Haemoglobin இன் அளவு மிகவும் குறைவாக காணப்படுகின்றது.

அவர்கள் கர்ப்பம் தரிக்கும் போது, கர்ப்ப காலத்தில் குழந்தையின் வளர்ச்சிக்கும், உடலில் ஏற்படும் மாற்றங்களிற்கும், குழந்தையை பிரசவிக்கும் போதும், பாலூட்டும் போதும் அவர்களது இரத்த தேவை அதிகரிக்கிறது.

எமது பகுதியில் இரும்புச்சத்து குறைபாட்டால் ஏற்படும் இரத்தச் சோகையே அதிகமாக இருக்கிறது. இதனை, எமது சமூகத்தில் எளிதில் கிடைக்கும் ஆரோக்கியமான உணவு வகைகளை உண்பதன் மூலம் நன்றாக நிவர்த்தி செய்யலாம்.

உதாரணமாக, கீரை வகைகள், இறைச்சி, ஈரல் போன்ற சத்துள்ள உணவுகளை உட்கொண்டால் பெண்களின் இரத்த வீதம் மிகவும் வேகமாக அதிகரிக்கும். தற்போது, பேரீச்சம் பழம் சாப்பிட்டு இரத்த வீதத்தை அதிகரிப்பது என்ற ஒரு பிழையான அபிப்பிராயம் நமது சமூகத்தில் இருக்கிறது.

அதற்காக பேரீச்சம்பழம் சாப்பிட வேண்டாம் என்று கூறவில்லை. அதை விட சத்துள்ள கீரை வகைகள், ஈரல், இறைச்சி, மீன் போன்றவற்றை கூடுதலாக உட்கொள்வது சிறந்தது. தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் இரும்புச்சத்து மருந்துகளை எடுத்து, இரத்த வீதத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

அதேபோல், நீரிழிவு என்பது நமது சமூகத்தில் மிகப்பெரிய சவாலான பிரச்சினையாக காணப்படுகின்றது.

(தொடரும்....)


Dr.A.சிறீதரன்,
பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.5 மில்லியனுக்கும் அதிகமான
## பீர் போத்தல்களால் அழகுபடுத்தப்பட்ட கோவில்

(பாங்கொக்)

தாய்லாந்தில் பல லட்சம் பீர் பாட்டில்களை கொண்டு புத்தர் கோவில் ஒன்று கட்டப்பட்டு இருப்பது அனை வருக்கும் ஆச்சரியத்தை வழங்கியுள்ளது.



அதாவது தாய்லாந்தின் சிகாகெட் மாகாணத்தில் குன் ஹான் மாவட்டத்தில் இந்த புத்தர் கோவில் அமைந் துள்ளது.

இந்த கோவிலின் தனிச் சிறப்பு என்னவென்றால் கோவில் வளாகம் முழுவதும் சுமார் 1.5 மில் லியனுக்கும் அதிகமான பீர் பாட்டில்கள் கொண்டு கட்டப் பட்டுள்ளது.

கோவில் கட்டடம் சிமெ ண்ட் கலவைகளால் கட்டப் பட்டது என்றாலும், இந்த பீர் பாட்டில்கள் அதன் மேல் புறத்தில் அழகு படுத்தும் விதமாக அடுக்கி வைக்கப் பட்டுள்ளது.

இந்த கோவில் வழி பாட்டு தலமாக மட்டும் இல் லாமல், மறு சுழற்சி, நிலைத் தன்மை மற்றும் மனித படைப்பாற்றலுக்கு சிறந்த கருது கோளாக விளங்குகிறது.

இந்த கோவிலின் படிக்கட் டுகளில் மட்டும் இல்லாமல் தூண்கள், பொதுக்குளி யலறைகள், பூஜை அறை கள், தண்ணீர் டாங்க் மற்றும் சுடுகாடு கூட பீர் பாட்டில்களால் வடிவமைக் கப்பட்டுள்ளது. (நி)

# சீனாவை எதிர்கொள்ள
## போர்க்கப்பல்களை அதிகரிக்கும் இந்தியா

(டில்லி)

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவை எதிர் கொள்ள 2035 ஆம் ஆண் டுக்குள் இந்திய போர்க்கப் பல்களின் எண்ணிக்கையை 175 ஆக அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக த இந்து செய்தி வெளியிட்டுள் ளது.

இந்தியப் பெருங்கடல் பகு தியில் சீன போர்க்கப்பல்களின் போக்குவரத்து அதிகரித்து வருகின்ற நிலையில், கம்போ டியாவின் றீம் என்ற இடத்தி லும் கடற்படைத் தளத்தை அமைக்கும் முயற்சியில் சீனா இறங்கியுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய பகுதிகளில் சீன கடற்படைத் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

அத்துடன் சீனா 355 போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்களுடன் உலகின் மிகப் பெரிய கடற்படையாக உரு வாகி வருவதாகவும் அடுத்த 5 முதல் 6 ஆண்டுகளில் சீனாவின் போர்க்கப்பல்களின் எண்ணிக்கை 555 ஆக அதிகரிக்கும் எனவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள் ளது.

இதனிடையே 2 இலட்சம் கோடி செலவில் 68 போர்க் கப்பல்களை தயாரிப்பதற்கு இந்திய கடற்படை முன்பதிவு செய்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2035 ஆம் ஆண்டள வில் இந்திய கடற்படையில் ஆகக்குறைந்தது 175 போர்க் கப்பல்கள் காணப்பட வேண் டும் என நிர்ணயிக்கப்பட் டுள்ளது. (நி)



# 40 மாணவர்களுடன் கவிழ்ந்த பேருந்து
## இருவர் பலி: ஐவர் கவலைக்கிடம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நியூயோர்க் நகரில் உள்ள ஒரஞ்சு கவுண்டியில் உள்ள நெடுஞ்சாலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

40 மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின் முன் டயர் வெடித்து, கட் டுப்பாட்டை இழந்து 50 அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் இருவர் உயிரிழந்தனர். மாணவர்கள் பலர் பலத்த காயமடைந்த நிலையில், மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>உயரம்: 5'7<br>தகைமை/தொழில்: O/L Electrician<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/13965 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 16<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: A/L Beautician (அழகுக்கலை)<br>எதிர்பார்ப்பு: நல்ல குணமுள்ள ஆண்<br>தொ.இ:G/13951 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'4<br>தகைமை/தொழில்:A/L Cima Audit Manager (மாலைதீவு).<br>எதிர்பார்ப்பு: கணக்காய்வு தொடர்பானவர்களும் ஏனையவர்களும்<br>தொ.இ: B/13967 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 6<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்:A/L (Swiss PR இல்லை)<br>எதிர்பார்ப்பு: சுவிஸ் PR உள்ளவர் மட்டும்<br>தொ.இ: G/13954 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம் : பூசம்<br>கி.பா: 59<br>உயரம்: 5' 6<br>தகைமை/தொழில்: BSc in information System embedded Engineer (Pvt)<br>எதிர்பார்ப்பு : BSc or IT பட்டதாரி<br>தொ.இ: B/13969 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 36<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/13960 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 31<br>உயரம் : 6<br>தகைமை/ தொழில்: degree in life science (canada), CO (Canada)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>மணமகன் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/13974 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 19<br>உயரம் :5' 3<br>தகைமை/தொழில்: BSc, MBA Account Assistant<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு/பட்டதாரி<br>தொ.இ:G/13964 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# உறுப்பு தானம் செய்வோருக்கு
## அரச மரியாதையுடன் இறுதிச்சடங்கு
### தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

(சென்னை)

இறக்கும் முன் உறுப்பு தானம் செய் வோரின் இறுதிச் சடங்குகள் இனி அரச மரியாதையுடன்மேற்கொள்ளப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில் "உடல் உறுப்பு தானத்தின் மூலம் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வளிக்கும் அரும் பணியில் நாட் டின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகின்றது.

குடும்ப உறுப்பினர்கள் மூளைச்சாவு நிலையை அடைந்த துயரச் சூழலிலும், அவர்களின் உடல் உறுப்புகளைத் தான மாக அளித்திட முன்வரும் குடும்பங்க ளின் தன்னலமற்ற தியாகங்களால் தான் இந்தச் சாதனை சாத்தியமாகியுள்ளது.

தம் உறுப்புகளை ஈந்து பல உயிர் களைக் காப்போரின் தியாகத்தினைப் போற்றிடும் வகையில் இறக்கும் முன் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச் சடங்குகள் இனி அரச மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்" எனத் தெரிவித்து ள்ளார். (நி)

# நீரில் மிதக்கும் மூன்றடுக்கு மசூதி

(துபாய்)

உலகின் முதல் மிதக்கும் மசூ தியை, பெரும் பொருட்செலவில் துபாயில் அமைப்பதற்கான பணிகளை அமீரக அரசு நேற்று ஆரம்பித்துள் ளது.

அரசு சார்பிலான இந்த திட்டத்தில் துபாயின் கவர்ச்சிக்கு கூடுதல் அம் சமாகவும், இஸ்லாமிய சுற்றுலா வின் அங்கமாகவும் மிதக்கும் மசூதி அமைந்திருக்கும் எனவும் இதன் மூலம் அமீரகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக் கையை 3 சதவீதம் அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மசூதியானது மொத்தம் 3 அடுக்கு களில் கட்டமைக்கப்பட உள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. அத்தோடு முதல் தளம் தண்ணீருக்கு அடியில் அமை யும். இங்கே ஒரே நேரத்தில் 75 பேர் கூடி தொழுகை நடத்த முடியும்.

மிதக்கும் மசூதி நடைமுறைக்கு வரும்போது உலகளாவிய ரீதியில் முதன்மையான இஸ்லாமிய மதத் தலங்களில் ஒன்றாக அது அமையும் எனவும் கணித்துள்ளனர்.

முக்கியமாக முஸ்லிம் அல்லாத வர்களும் இந்த மசூதிக்கு செல்ல அனுமதிக்க முடிவு செய்திருக்கின் றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளின் விதிமுறைகள் கடுமையாக்கப்படும்

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளின் விதிமுறைகளை கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் பயன்படுத்தக் கூடிய உணவு வகைகளின் தரங்கள் குறித்து கடுமையான ஆய்வு நடத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## இந்த ஆண்டில் மட்டும் 957 வைத்தியர்கள் விலகல்

(கொழும்பு)

இந்த ஆண்டில் மட்டும் ஏறக்குறைய ஆயிரம் வைத்தியர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளதாக கோபா குழுவில் தெரியவந்துள்ளது.

5 வருட விடுமுறை பெற்று வெளிநாடு சென்றமை, சேவையில் இருந்து ராஜினாமா பெற்றமை, முன்னறிவிப்பின்றி சேவையில் இருந்து விலகியமை மற்றும் குறிப்பிட்ட சேவைக் காலம் முடிந்து ஓய்வு பெறுதல் போன்ற காரணங்களால் இந்த வருடம் 957 வைத்தியர்களை சுகாதார சேவை இழந்துள்ளதாக குழு முன் ஆஜராகியிருந்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜீ. விஜேசூரிய தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவுகளின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய செயற்பாடுகள் குறித்து ஆராய கோபா குழு கூடியபோதே வைத்தியர் ஜி.விஜேசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிலையில் சில சிகிச்சை பிரிவுகளில் 24 மணி நேர சேவைகளை பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும், தமது சேவைக்கான உரிய பெறுமதி இன்மையே வைத்தியர்கள் வெளிநாடு செல்வதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்ட அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார். (நி)

## இனவாதத்தால் நாட்டை படுகுழியில் தள்ள வேண்டாம்

### சமன் ரத்னப்பிரிய எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டிற்குள் இனவாத மோதல்களை ஏற்படுத்தி தங்களது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள சில அரசியல் குழுக்கள் முயற்சித்து வருவதாக ஜனாதிபதியின் தொழிற்சங்க தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

மூன்று தசாப்த கால யுத்தம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவாக நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் சரிவடைந்து காணப்பட்டது. தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டு வரும் நிலையில் நாட்டுக்குள் மீண்டும் இனவாத மோதல்கள் ஏற்படுவது அவசியமில்லாத ஒன்று எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சனல் 4 விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்திற்குள்ளும் சில தலைமீடுகள் காணப்படுகின்றன. சில அரசியல் குழுக்கள் பல்வேறுபட்ட நிலைப்பாடுகளை முன்வைக்கின்றன.

அது குறித்து சரியான விசாரணையை நடத்த அரசாங்கம் முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைத்துள்ளனர்.

இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஜனாதிபதியின் தலையீட்டின் கீழ் அது குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர்கள் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அதன் வாயிலாக தீர்வு எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## ஐ.எம்.எப் பிரதிநிதிகள்- காஞ்சன சந்திப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மின்சார துறையின் மறுசீரமைப்புகள் குறித்த தகவல் தொடர்பு தளத்தை செயற்படுத்தும் திறன், புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான போட்டி ஏல கட்டமைப்புகள் மற்றும் வலு சக்தி திறனுக்கான தொழில் நுட்ப மற்றும் நிதி உதவி குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (நி)



## புரட்டாசி மாத இராசி பலன்கள் 18.09.2023-17.10.2023

### கும்பம்

**நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளும் கும்ப இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி வக்கிர இயக்கத்தில் விரயஸ்தானத்திற்கு வருகிறார். எனவே வரவை விட செலவு அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லைகளும், அதனால் மனஉளைச்சலும் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு அதிகரிக்கும்.

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைப்பது போல் இருந்தாலும் அது கடைசி நேரத்தில் கைநழுவிச் செல்லலாம். இம்மாதம் உங்கள் எண்ணங்கள் செயலாக, யாரேனும் ஒருவருடன் இணைந்துதான் செயற்பட வேண்டும்.

**புதன் வக்கிரம்**

உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிதியானவர் புதன். அவர் கன்னி இராசியில் உச்சமும், வக்ரமும் பெறுகிறார். புரட்டாசி 10 ஆம் திகதி இந்த நிகழ்வு நடைபெற இருக்கிறது. இதன் விளைவாக இடமாற்றம், ஊர் மாற்றம் பற்றி சிந்திப்பீர்கள்.

உத்தியோகத்தில் எதிர்பார்த்த இலாகா மாற்றம் வரலாம். பிள்ளைகள் வழியில் சுபவிரயங்கள் ஏற்படும். கல்யாணம், காதுகுத்துவிழா போன்றவை நடைபெறுவதற்கான அறி குறி தென்படும். சேமிப்பு உயரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். புரட்டாதி 17 ஆம் திகதி , துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல காரியங்கள் பலவும் நடை பெறும்.

நாட்டுப்பற்று மிக்கவர்களின் கூட்டு முயற்சியில் புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரலாம்.

பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது பல மடங்கு லாபம் தரும் விதத்தில் விற்பனையாகலாம். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

**துலாம் - புதன்**

புரட்டாதி 28 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் வருகிறார். பஞ்சம - அஷ்டமாதிபதியான புதன் துலாம் ராசிக்கு வரும்பொழுது, பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். புதிய முயற்சிகளில் குறுக்கீடுகள் வந்தாலும் அதை வெல்லும் ஆற்றல் உங்களுக்குப் பிறக்கும்.

பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முடிவு பலன்தரும். அவர்கள் வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்திருந்தால் வாய்ப்புகள் கைகூடும். காரிய வெற்றிக்கு நண்பர்களும், உறவினர்களும் போட்டி போட்டுக்கொண்டு உதவுவர்.

பழைய வாகனத்தை கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் உண்டு.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய தகவல் வரலாம். கலைஞர்களுக்கு கௌரவம், அந்தஸ்து உயரும். மாணவ -மாணவிகளுக்கு நல்ல மதிப்பெண் கிடைக்கலாம். பெண்கள் புத்துணர்ச்சியோடு புதுமை படைப்பர். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும்.

### மீனம்

**மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் மீன இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் குரு வக்கிரம் பெற்றிருக்கிறார். அவரோடு ராகுவும் இணைந்திருக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லைகளும், உற்சாகக் குறைவும் உருவாகும். தடைகளும், தாமதங்களும் புதிய முயற்சிகளில் குறுக்கீடுகளும் வரலாம். லாபாதிபதி சனியும் வக்கிரம் பெற்றிருப்பதால், பொருளாதாரத்தில் பற்றாக்குறை அகலும். எதையும் யோசித்து செய்வதன் மூலமே எண்ணங்கள் நிறைவேறும்.

**புதன் வக்ரம்**

புரட்டாதி 10 ஆம் திகதி, கன்னி இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 4, 7 இற்கு அதிபதியானவர் புதன். அவர் வக்கிரம் பெற்றாலும், உச்சம் பெற்றிருப்பது யோகம்தான். கல்யாணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் கைகூடும்.

மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு திருப்தி தரும். என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிப்போட்ட இடம் விற்பனையாகி அதிக லாபத்தை தந்து மகிழ்ச்சியைப் பெருக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு.

வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் கிடைக்கும். புரட்டாதி 17 ஆம் திகதி, துலாம் இராசிக்குச் செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் அஷ்டமத்தில் அடியெடுத்து வைப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை மட்டுமல்ல. உடன்பிறப்புகளாலும் சில உபத்திரவங்கள் வரலாம். சொத்துப் பிரச்சினை தலைதூக்கும். "பெற்றோர் மற்ற சகோதரர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் தங்களுக்கு கிடைக்கவில்லையே" என்று ஆதங்கப்படுவீர்கள். தொழில் பங்குதாரர்களால் தொல்லைகள் உண்டு.

**துலாம் - புதன்**

புரட்டாசி 28 ஆம் திகதி, துலாம் இராசிக்குப் புதன் வருகிறார். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் உண்டு. மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வரலாம். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகளை செய்வீர்கள்.

நவக்கிரகத்தில் உள்ள புதன் பகவானை வழிபடுவது நன்மைகளை வாரி வழங்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுமையும், நிதானமும் தேவை. தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு போட்டிகளைச் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டிய நேரம் இது.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். கலைஞர்களுக்கு பாராட்டும், புகழும் உண்டு. மாணவ - மாணவிகள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பது நல்லது. பெண்களுக்கு விரயங்கள் கூடுதலாக இருந்தாலும், தேவைக்கேற்ற பணம் வந்து சேரும். சுபச்செய்தி உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றம் உறுதியாகலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர். நடு நிலைமையே நீதியின் உயிர்.

– ஜஸ்டினியன்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## நீதியின் ஆட்சி நடந்தால் மனித உரிமை நிலைபெறும்

தமிழ் மக்களின் உரிமையை அரசாங்கம் வழங்கும் என்ற எதிர்பார்ப்புகள் அனைத்தும் தோல்வியில் முடிந்து போயின.

தவிர, அரச கட்டமைப்புகளும் தமிழ் மக்களுக்கு எதிரானவை என்ற உண்மையும் நிரூபணமாயிற்று.

ஆம், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்குமாறு கோரி பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு ஆதரவாக கொழும்பு சட்டமா அதிபர் திணைக்களத்து உத்தியோகத்தர்களும் நேற்று முன்தினம் (22) யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றுக்கு வந்திருந்தனர்.

அதேபோல் பருத்தித்துறை நீதிமன்றிலும் தியாகி திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்குமாறு கோரி பருத்தித்துறை பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

மேற்குறித்த மனுக்கள் தொடர்பில் ஆராய்ந்த யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்கள்; அமைதியாக நடைபெறுகின்ற நினைவேந்தலைத் தடுக்க முடியாதெனத் தெரிவித்து குறித்த மனுக்களைத் தள்ளுபடி செய்தன.

தியாகி திலீபனின் நினைவேந்தலைத் தடை செய்துவிட வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களம் களத்தில் இறங்கியதன் மூலம், இந்த நாட்டின் உயரிய சட்ட அமைப்பொன்று தமிழ் மக்களின் உரிமைக்கு எதிராகச் செயற்பட்டது என்ற உண்மை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

ஆம், நினைவேந்தல் என்பது அடிப்படை மனித உரிமை. இந்த மனித உரிமையைப் பாதுகாக்கின்ற மிக உயரிய பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்குரியது.

இருந்தும் தியாகி திலீபனின் நினைவேந்தலை தமிழ் மக்கள் அனுஷ்டிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக.சட்டமா அதிபர் திணைக்களம் யாழ்ப்பாணம் நீதிமன்றுக்கு வருகை தந்து நினைவேந்தலுக்கு தடை விதிக்கின்ற தீர்ப்பை வலியுறுத்தும் வகையில் வாதத்தை முன்வைத்ததெனும்போது, அங்கு இனம் சார்ந்த பேதமை எத்துணை தூரம் வியாபித்துள்ளதென்ற நிதர்சனத்தை நாம் அறிய முடிகிறது.

ஆயினும் மனித உரிமைகள் என்ற விடயத்தில் இன, மத, மொழி பேதம் எதுவும் கிடையாது என நீதிமன்றங்கள் தீர்ப்பை வழங்கியபோது, நீதியின் ஆட்சியில் மனித உரிமைகள் நிலைநாட்டப்படும் என்ற உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

ஆகவே நம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு தரும். எங்கள் பிரச்சினையை அரசாங்கம் மனிதநேயத்தோடு பார்க்கும் என்ற நினைப்புகள் எல்லாம் வீணானவை. ஏமாற்றத்துக்குரியவை என்பது உணரப்பட்டு விட்டது.

ஆகையால் இனி நீதி பரிபாலனம் மட்டுமே எங்கள் உரிமையை – எங்கள் உரித்தை உறுதி செய்யும். பாதுகாக்கும் என்ற உண்மையின் கதவு திறக்கப்பட்டுள்ளது.

ஆக, எதிர்காலத்தில் எங்கள் உரிமை எங்கள் நீதிமன்றங்களினூடாகவே எட்டப்பட வேண்டும். அதற்கான சூழமைவு உருவாகிவிட்டது.

# வேட்புமனு இரத்தானால் அரசுக்கு 1 பில்லியன் ரூபாய் நட்டமேற்படும்

## பெப்ரல் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரத்து செய்வதற்கு அண்மையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால், 1 பில்லியன் ரூபாயிற்கும் அதிகமான நஷ்டம் ஏற்படுமென பெப்ரல் அமைப்பு (PAFFREL) தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கருத்து தெரிவிக்கையில்,

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில் இது தொடர்பான தீர்மானம் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டிருக்க வேண்டிய ஒன்றல்ல. இதுபோன்ற முடிவுகளை எடுப்பதால் அரசுக்கு ஏற்படும் இழப்புக்கு யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்?

தற்போது தேர்தல் நடைபெறவில்லை என்றாலும், உள்ளூராட்சி தேர்தலை ஒரு கட்டத்தில் நடத்தியே ஆகவேண்டும்.

2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்காக, வாக்குச் சீட்டு அச்சிடுதல் உட்பட, இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே பெரும் தொகையை செலவிட்டுள்ளதாகவும் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தல்கள் பிற்போடப்பட்டமையினால் வேட்பு மனுக்களை சமர்ப்பித்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதை கருத்திற் கொண்டே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# முதற் தவணை செயற்பாடுகளில் திருப்தியில்லை; IMF வருத்தம்

## முழுப் பொறுப்பையும் ஏற்பதாக அரசாங்கம் அறிவிப்பு

சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலானகலந்துரையாடல் தற்போது இடம்பெற்று வருகின்றநிலையில், இந்தக் கலந்துரையாடல்களில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கலந்து கொண்டுள்ளார்.

இதன் போது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய போதிலும் குறிப்பிட்ட சில செயற்பாடுகளில்மெதுவான தன்மையையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந் நிலையில் அரசாங்கத்தின்வருமானம் அதிகரிக்கப்பட வேண்டுமாயின் முதலீடுகளும் அதிகரிக்க வேண்டும். அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் இலக்குகள் இன்னும் எட்டப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளநிலையில், இந்த வேலைத்திட்டத்தின் முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்கும் என சாகல ரத்நாயக்க தெரிவித்துளார். (ம-7)

# புகையிரத கட்டணம் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றியதன் பின்னர் அனைத்து ரயில் கட்டணங்களை அதிகரிப்பது மற்றும் பயணபற்றுச்சீட்டு வழாங்குவது குறித்தும் போக்குவரத்து அமைச்சு கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போதுள்ள குறைந்தபட்ச கட்டணமான 20 ரூபாவில் இருந்து பேருந்து கட்டணத்திற்கு இணையாக அதிகரிக்க அமைச்சு அதிகாரிகள் முன் மொழிந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# மன்னாரில் தீக்கிரையான பல ஏக்கர் காடுகள்

மன்னார் கீரி பகுதியில் உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான காணிக்கு அருகில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக பல ஏக்கர் காடுகள் எரிந்து நாசமடைந்துள்ளன.

நேற்று மதியம் 2.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீப்பரவல் காரணமாக அப்பகுதியில் உள்ள மரங்கள் புதர்கள் உட்பட அனைத்திலும் தீ பரவிய நிலையில் அதிக காற்று காரணமாக தீயை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

தொடர்ந்து வீசிய காற்று காரணமாக அருகருகில் இருந்த காடுகளுக்கும் தீ பரவல் அடைந்தது.

இதனை தொடர்ந்து அருகில் இருந்த் பொது மக்கள் மற்றும் கடற்படையின் தொடர் முயற்சியினால்தீ கட்டுக்குள்கொண்டு வரப்பட்டது.

இருப்பினும் தீ பரவல் காரணமாக அப்பகுதியில் காணப்பட்ட ஆயிரக்கணக்கான பனை மரங்கள் உட்பட பல ஏக்கர் காடுகள் எரிந்து நாசமாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உரிய தீயணைப்பு பிரிவு காணப்படாமையினால் வவுனியா தீயணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் அனைத்தும் எரிந்து அணையும் வரை தீயணைப்பு சேவை சம்பவ இடத்திற்கு வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கம்பஹாவில் வாகன விபத்து; 13 பேர் காயம்

(கம்பஹா)

கம்பஹா, பெலும்மஹர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் பெலும்மஹர சந்தியில் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த கொள்கலன் மீது திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றிருந்தது.

விபத்தில் 13 பேர் காயமடைந்து கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் 10 பேர் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களது நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் யக்கல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துடன் பஸ்ஸின் பின்னால் மற்றும் கொள்கலனுக்கு முன்னும் பயணித்த 07 வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யக்கல போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# நோயாளியைப் பார்வையிட அனுமதி மறுத்த வைத்தியர் மீது கடுந் தாக்குதல்

(கொழும்பு)

வத்தேகம வைத்தியசாலையில் நோயாளர் ஒருவரை பார்க்க அனுமதிக்காத காரணத்தினால் குறித்த வைத்திய்ர் தாக்கப்பட்டதாக வத்தேகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான வைத்தியர் வத்தேகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பின் இரவு வேளையில் வைத்தியசாலைக்கு வந்த மூவர் இரவு கடமையில் இருந்த வைத்தியரிடம் தங்கி சிகிச்சை பெற்று வரும் நோயாளியை பார்வையிட அனுமதிக்குமாறு கோரியதாகவும் இந்த நேரத்தில்நோயாளிகளைப் பார்க்க அனுமதிக்க மாட்டோம் என வைத்தியர் தெரிவித்ததையடுத்து சந்தேக நபர்களுக்கும் வைத்தியருக்கும் இடையில் குறித்த வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு கிடைத்த உயரிய அங்கீகாரம்



(வவுனியா)

இலங்கை பொது நிதிக் கணக்குகள் சங்கத்தினால் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைகள், கணக்குகள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான போட்டியில் வடக்கு மாகாண சபைக் குட்பட்ட 29 பிரதேச சபைகளுக்குள் வவு னியா வடக்கு பிரதேசசபை மாகாணத்தில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டு தங்க விருதினை பெற்றுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன் தினம் அநுராதபுரத்தில் உள்ள வடமத்திய மாகாண கேட்போர் கூட மண்டபத்தில் இடம் பெற்றது. (நி-299)

# விவசாயத்தில் கிடைத்த வருமானத்தில் 150 குடும்பங்களின் பசிபோக்கிய விவசாயி

(கண்டாவளை)

கிளிநொச்சி கோரக்கண் கட்டு பகுதியைச் சேர்ந்த விவசாயியான இலங்கேஸ்வரன் என்பவர் விவசாயத்தில் கிடைத்த வருமானத்தை கொண்டு குறித்த பிரதேசத்தில் வாழும் 150 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி வீதம் நேற்று வழங்கி வைத்துள்ளார்



வேறு எந்த வருமானங்களும் இன்றி தன்னுடைய விவசாய செய்கை மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தனது பிரதேசத்திலே வாழுகின்ற 150 குடும்பங்களுக்கு தற்போதைய வறட்சி மற்றும் வறுமை காலத்தில் இந்த அரிசியை வழங்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்க ஒரு விடயம் என பலரும் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 180 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 500 |
| தக்காளி | 200 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 180 | 200 |
| கோவா | 150 | 140 | 150 | 160 |
| கரட் | 400 | 280 | 250 | 300 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 160 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 150 | 150 | 150 |
| பீற்றூட் | 140 | 120 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 350 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 150 | 100 |
| போஞ்சி | 400 | 450 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1200 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 300 | -- | 350 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 170 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 70 | 60 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2921

### கார்த்தி

நாலு பேர் காபி குடிக்கனும்னா



பால்ல எவ்வளவு தண்ணி ஊத்தினாலும் தப்பேயில்ல

### அக்ஷி




### குரு


கி பி 2040 :




அம்மா : என் மவன் அழகுக்கும் அறிவுக்கும் சீமைல இருந்து தான் பொண்ணு வருவா...

### மதுஷ்

பக்தன்: சாமி பொண்ணுங்க எல்லாம் நல்லவளா இருக்காங்க, ஆனா ஏன் பொண்டாட்டிங்க மட்டும் இப்படி கொடுமைப்படுத்துறாங்க?



கடவுள் : நான் பொண்ணுங்களைத் தான் படைத்தேன். நீங்கதான் பொண்டாட்டி ஆக்கிட்டீங்க

### பரணி



பசிக்காத கடவுளுக்கு ரூபாய் நோட்டும் பசித்த மனிதனுக்கு சில்லறை துட்டும் கொடுக்கும் சமூகம் இது.


### றேகா

He : Baby நான் ஒரு question கேட்கட்டுமா?

she: கேளுடா.

He: மல்லி பூ எந்த செடில இருந்து வருது?

she: kothamalli செடில இருந்துடா.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண தரப்...

வித்துள்ளார்.

முன்னதாக நவம்பர் மாதம் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளதாக அவர் பாராளுமன்றத்தில் வைத்து குறிப்பிட்டிருந்தார்.

எனவே கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை நடத்தப்படும் புதிய திகதி அடுத்த வாரம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் என மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## 2 இலட்சத்து...

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு பகுதியில் உள்ள புதர் ஒன்றுக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு லட்சத்து எழுபதாயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதோடு சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் தள்ளாடி இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கபெற்ற புலனாய்வு தகவலுக்கு அமைய மன்னார் பொலிஸ் குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே தாழ்வுபாடு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இரண்டு பொதிகளில் சுற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த குறித்த போதை மாத்திரைகளின் தற்போதைய சந்தை மதிப்பு 3 கோடி என்பதுடன் போதை மாத்திரை கடத்தல் உடன் தொடர்புபட்டதாக தாராபுரம் பகுதியை சேர்ந்த 22 வயதான சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,285)

## முல்லையில்...

ஒன்றுக்குள் தூக்கில் தொங்கியபடி அழுகிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## இலங்கையின்...

அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கருத்து சுதந்திரத்தை அர்ப்பணித்து விட்டு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தக் கூடாது.

சமாதானத்தை பல்வேறு வழிகளில் அடைய முடியும் என நம்புகிறோம். பொருளாதார அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்திற்காக சமூகங்கள் ஐக்கியமாக செயற்படுவது அப்படியான வழிகளில் ஒன்று.

இலங்கையின் இளைஞர்களை அங்கீகரித்து நாட்டின் எதிர்காலத்திற்கு வலுவூட்டுவதற்காக நாங்கள் உங்களை ஊக்குவிப்போம்என நாட்டின் தலைவர்களுக்கு நான் கூறுகின்றேன்.

நாம் அனைவரும் இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை கொண்டுள்ளோம். பொருளாதாரம், அரசியல் ஸ்திரத்தன்மை,புதிய உற்பத்திகளை கட்டியெழுப்புவது மாத்திரமன்றி ஜனநாயகத்தை பாதுகாப்பது குறித்த எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளோம்.

ஊழலுக்கு எதிராக படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்துவோம். ஸ்திரத்தன்மை என்பது கருத்து சுதந்திரத்தை விட்டு கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றல்ல.

அமைதியான முறையில் எதிர்ப்பு வெளியிடுவது, கலைப்படைப்புகள் மூலமாக கருத்து கூறுவது அல்லது சமூக ஊடகங்களில் கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

சமாதானம் தொடர்பில் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ள அமெரிக்கா, இலங்கையின் எதிர்காலம், சமாதானம் மற்றும் ஐக்கியத்திற்காக உங்களுடன் இணைந்து செயற்படும் என்ற வாக்குறுதியை உங்களுக்கு வழங்குகிறேன் என அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## புங்குடுதீவில்...

முன்னெடுக்கப்பட்டது.

புங்குடுதீவு குறிகாட்டுவான் பகுதியில் ஆரம்பித்த மேற்படி நினைவேந்தல் ஊர்த்தியானது புங்குடுதீவில் பல பகுதிகளிற்கும் பவனியாகச் சென்றது

இதன்போது மக்கள் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். (ம-7,104)

## திலீபன் நினை...

வாகனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் குறித்த வாகனப் பேரணி முல்லைத்தீவு மாவட்டத்தை அடைந்துள்ளதாக தெரிவித்து, திலீபனின் நினைவேந்தலுக்கும் அந்த வாகனப் பேரணிக்கும் தடைவிதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (ம-7)

## மன்னாரில்...

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் மாலை 4 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றி அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் முக்கியஸ்தர்கள், மக்கள் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ம-7,285)

## மக்களின்...

பிரேமதாஸ தெரிவித்தார்.

தெவிநுவர மீன்பிடித் துறைமுகத்திற்கு விஜயம் செய்த சஜித் பிரேமதாஸ ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த தாவது,

அரசாங்கத்தின் இந்த ஊடக அடக்குமுறையானது பயங்கரவாதம் என்பதால் இதற்கு இடம் கொடுக்கப் போவதில்லை.

ஊடக ஒடுக்குமுறைக்கும் சமூக ஊடகங்களின் கட்டுப்பாட்டிற்கும் எதிராக மக்களுடன் வீதியில் இறங்கிப் போராடுவோம்.

சமூக ஊடகங்களின் நிகழ்ச்சி நிரல்களை ஜனாதிபதி மற்றும் நாட்டின் அரசாங்கத்தின் கைகளில் எடுக்கப் போகும் இந்த முயற்சிகளில் இன்னொரு போராட்டம் உருவாகும். இதன் மூலம் பெரிய பதவிக் கதிரை கூட இழக்கப்படலாம்.

மாளிகைகளில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு இனி மேலும் மக்களிடமிருந்து மறைந்திருக்க முடியாது.

களத்திற்குச் சென்று மீனவர்களின் துன்பத்தை கேட்டறிய வேண்டும். அறைகளுக்குள் இருந்து கொண்டு ஊடகங்களை அடக்கவும், ஊடக சுதந்திரத்தை அழிக்கவும் ஏற்பாடுகளை செய்வதற்குப் பதிலாக களத்தில் சென்று மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

ஊடகங்களை ஒடுக்குவதற்கு ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அத்தகைய அரச பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதோடு, எதிர்க்கட்சி ஒருபோதும் இதற்கு இடமளிக்காது.

நமது நாடு ஒரு தீவாக இருந்தாலும், நாட்டில் மீன் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் போவதற்கு வெட்கப்பட வேண்டும்" என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## உணர்வுபூர்வமாக...

ரெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு உயிர் துறந்தார். இவரை இந்திய அரசு இறக்க விட்டது.

தியாக தீபம் திலீபன் நினைவாக தமிழர் தாயகத்தில் பல இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறுகின்றது. இதில் பொதுமக்கள் பலர் உணர்வுபூர்வமாக பங்கேற்கின்றனர்.

நினைவேந்தல் நிகழ்வுகளின்போது பாதுகாப்புத் தரப்பினரின் கெடுபிடிகளும் தாராளமாகக் காணப்படுகின்றது. (ம-7)


மெகா பவர்
திகதி 23/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1594
X 14 08 14 34 49
39485

தன நிதானய
திகதி - 2023.09.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1276
M 21 24 50 66 M
11429

Lucky 7
திகதி 23.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0072
L7 இலக்கம் 3 8
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 1 5 4 1 3 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3488
சீட்டிழுப்பு திகதி 23.09.2023
G 05 20 24 39
G 50825
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.23
சீட்டிழுப்பு இலக்கம் 555
மீனம் 19 21 34 58 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/09/23
சீட்டிழுப்பு இலக்கம் 5246
U 0 2 1 3 8 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2220
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.23
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 47 49 68 69 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,438,164.40
46673 697
DLB

சனிதா
திகதி 2023.09.23 வெற்றி வாரம் 4381
01 08 38 73 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,414,832.00
43311 954
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3932
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.23
தினம் சனிக்கிழமை
09 26 29 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,400,816/-
99748 582
DLB

ஜய ரக
திகதி 23.09.2023 வெற்றி வாரம் 1396 வர்ணம் சிவப்பு
I 01 03 46 58 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 443,540,724.20
90199 997
DLB
தொலை பேசி: 011-2 333 540-47
Web : www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
සංවර්ධන වාසනාව
வெற்றி வாரம் 631
திகதி 2023-09-23
வர்ணம் ஆரஞ்சு நிறம்
C 23 66 70 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,647,136.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 548/47
Web: www.dlb.lk

அட கோடிபதி
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2046
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,645,864/-
சீட்டிழுப்பு திகதி : 2023.09.23
31 33 39 45 G
78239 267
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த தொழிலொன்றைத் தேடும் உங்களுக்கான ஒரு சிறந்த வாய்ப்பு

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தால் நாடு முழுவதும் திறக்கப்படவுள்ள எமது புதிய கிளைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது. இவ் அரிய வாய்ப்பை தனதாக்கிக் கொள்ளுங்கள்.

**புதிய கிளைகள்**
மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கண்டி

**தகைமைகள்**
தரம் 10, O/L, A/L கல்வி கற்ற மாணவர்கள்

- தங்களின் கல்வித்தரம் மற்றும் திறமைக்கேற்ப கொடுப்பனவுகள், சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் வழங்கப்படும்.
- உணவு தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- மாதாந்த வருமானம் 45,000 க்கு மேல்

(17211)

**077 985 8580, 077 517 9034**

## மலிவு விற்பனை

SILVER SHIELD

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7273)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7316)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

**V2 TRAVELS - 0777-068-777**

## WORK IN UK

**WORK PERMITS**

**CONSTRUCTION WORKERS**

- 5 YEAR WORK PERMITS
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES



போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்

(C-7346)

CIMS COLLEGE **0777-068-777**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

**பஸ் சேவை**

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு
2,900/=
வடமராட்சி - கொழும்பு
2,700/=

(17019)

**T.P: 077 544 8503**

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் உள்ள கடை ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை.
சம்பளம் 50,000/- மதிய உணவுடன்

(17196)

**077 937 0000**
**075 988 1000**

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள 05 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 40-55 வயதிற்குட்பட்ட இரு பெண்கள் வேலைக்குத் தேவை.

(17191)

- சமையல் வேலை - 45,000 /-
- 03,05 வயதான இரு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு - 45,000/-

**075 498 5400, 077 937 0000**
**075 988 1000**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

## CANADA VISA

1) Minor Education - (Age Limit - 7 to 17 years)
தாய். தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2) Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3) Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4) Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**Contact : VISA Consultant,**
**136, Adiyapatham Road,**
**Thirunelvely, Jaffna.** T.P : 077 038 5584

(17179)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 40 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை.

(17216)

**077 905 8615**
Viber & Whatsapp

## மணமகன் தேவை

1989ம் ஆண்டு காரைநகரைப் பிறப்பிடமாக கொண்ட தற்போது கனடாவில் P.H.D பயிற்சியுள்ள மீனராசி ரேவதி நட்சத்திரம் உள்ள மணமகளுக்கு கனடாவில் P.R உள்ள மணமகன் தேவை.

(17183)

**077 520 7999**
**077 757 7613**

## மணமகள் தேவை

யாழ்.47 வயதான திருமணமாகாத கணனி ஆசிரியருக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. சமயம் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. சீதனம், திருமணச் செலவுகள் எதிர்பார்க்கப்பட மாட்டாது.

(17193)

**075 113 2599**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
15.10.1947

மறைவு
23.09.2023

சங்குவேலி அ.த.க. பாடசாலையின் அதிபரும், கற்பகச்சோலை மக்கள் ஒன்றியம் சுவிஸ் அமைப்பின் தாயக ஒருங்கிணைப்பாளரும், கற்பகச்சோலை இலவசக்கல்வி நிலையத்தின் நிர்வாகியுமாகிய திரு.வீ.சிவாகரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர் அரியகுட்டி வீரசிங்கம்

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கள்ளமில்லா புன்சிரிப்பும்
கனிவான பார்வையும் காட்டும் ஐயா!
கண்ணீரில் கலைந்து விட்டோம்.
கலக்கத்தில் நனைந்துபோனோம்.
காலத்தின் கோலமோ? கடவுளின் நாட்டமோ?
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உம் நினைவோடு நாம் என்றும் வாழ்வோமே!

பிரிவால் வாடும்...
**கற்பகச்சோலை மக்கள் ஒன்றியம் சுவிஸ் மற்றும் கற்பகச்சோலை இலவசக்கல்வி நிலையம்.**
**வட்டு வடக்கு, சித்தன்கேணி.**

(17210)

## மணமகள் தேவை

1987ம் ஆண்டு (இந்து) பிறந்த அச்சுவினி 2ம் பாதம், பாவம்-57 உடைய அரச தொழில் புரியும் மணமகனுக்கு அரச தொழிலில் உள்ள மணமகள் தேவை

(17205)

**077 396 0479**
**077 296 1462**

## விற்பனைக்கு

வயலுக்கும் வாழைத்தோட்டத்துக்கும் இடக் கூடிய உக்கிய எரு விற்பனைக்கு உண்டு

(17208)

**077 129 1636**

## கடை களஞ்சியத்துடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் களஞ்சியத்துடன் கூடிய 2 மாடி கடை குளியலறை வசதிகளுடன் விற்பனைக்கு தொடர்பு

(17141)

**077 728 0826**

## IELTS - New Batch ஆரம்பம்

**இத்துடன் Basic & Advance Grammar Classes**
**இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.**
**077 798 9830 By:-B.MURALI**

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

(17142)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 78 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு
**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17215)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தா... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org